
டிசி
ஜு 1991

JC
[illegible], N91Tx.
N91.
219977


# டாக்சி

விலை ரூ.2-50

செப்டம்பர் 1991



## ஸ்ரீமத் பாகவதம்



## முதல்வரைப் பாராட்டுகிறார் ஆசிரியர்

## தராசு படுகொலையில் ஷியாம் உடந்தையா?

ஆசிரியர்

# தராசு மக்கள் மன்றம் தடுமாறுகிறது!

## தடுமாறும் தராசு மக்கள் மன்றங்கள்

தராசு பத்திரிகை ஆசிரியர் திரு.ஷ்யாம் அவர்களை நடுநிலையாளர் என்றும், மக்களுக்கு நல்ல சேவைகள் செய்வார் என்று நம்பிக் கொண்டிருந்த தராசு மக்கள் மன்ற தோழர்கள், தராசு அலுவலகம் தாக்கப்பட்டு இரண்டு அப்பாவி ஊழியர்கள் பலியான சம்பவத்திற்கு பின் தராசு மீதுள்ள நம்பிக்கை சந்தேகிக்க ஆரம்பித்துள்ளார்கள்.

சம்பவம் நடந்த உடனே ஆசிரியர் ஷ்யாம் பத்திரிகையாளர்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும் தங்கள் அலுவலகத்தை தாக்கியவர்கள் முன்னாள் உள்துறை செயலாளர் நாகராஜன் தூண்டுதல் பேரில் விடுதலைப் புலிகள்தான் திட்டமிட்டதாக கூறினார்.

ஆனால் இன்று வரை எந்த விடுதலைப்புலிகளும் இந்த வழக்கிற்காக கைது செய்யப்படவில்லை. கைது செய்யப்பட்டவர்கள் கூட எந்த வகையில் நாகராஜனோடு தொடர்பு உள்ளவர்கள் என விசாரணையில் உறுதி செய்யப்படவில்லை.

இதை பல பத்திரிகைகள் கோடிட்டு காட்டிய பிறகும் கூட ஷ்யாம் அவர்கள் நாகராஜனையும், விடுதலைப்புலிகளையும் கூறிக் கொண்டிருப்பது, இவர் யாருக்கோ கட்டுப்பட்டு இருப்பதை போன்ற தோற்றத்தையும், இவரும் இந்த படுகொலையில் உடந்தையாக இருப்பாரோ? என்ற எண்ணம் நடுநிலையாளர்களுக்கும், வாசகர்களுக்கும், தராசு மக்கள் மன்றங்களின் தோழர்களுக்கும், பொதுமக்களுக்கும் உண்டாகியிருக்கிறது.

மக்கள் மத்தியில் நற்பணிகளை செய்து நல்ல பெயர்களை பெற்று வந்த தராசு மக்கள் மன்றங்கள் ஆசிரியர் ஷ்யாம் அவர்களை ஒதுக்கிவிட்டு புதிய தலைவரை தேர்ந்தெடுக்கக் கூடிய சிந்தனையும் பரவலாக தராசு மக்கள் மன்றங்களில் நிலவுகிறது.

நடுநிலையாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் ஏற்பட்டுள்ள இந்த சந்தேகங்களுக்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு ஆசிரியர் ஷ்யாம் அவர்களையே சார்ந்தது.

காதில் கேட்டதை கூறுகிறோம்! ''யாம் அறியோம், பராபரமே.''

## ஜீவா vs நேசமணி

தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு.எம்.ஜி.ஆர். அவர்கள், மறைந்த கம்யூனிஸ்ட் தலைவரும், சிறந்த இலக்கியவாதியும், பொதுவாழ்வுக்கே தன்னை அர்ப்பணித்து மறைந்த தலைவர் தோழர் ஜீவா அவர்களுக்கு நினைவாக ஏதேனும் செய்ய வேண்டும் என்று எண்ணி நாகர்கோவிலை தலைமையாகக் கொண்டு ஓடும் பேருந்து கழகத்திற்கு ஜீவா போக்குவரத்துக் கழகம் எனப் பெயரிட்டார். உடன் அமல் செய்யவும் ஆணை இட்டார்.

ஆனால்,

குமரி மாவட்ட மக்கள் எங்கள் பகுதி தலைவர் நேசமணி பெயரில் தான் போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்க வேண்டும். வேறு பெயரில் அனுமதிக்க மாட்டோம் என்று பெரிய அளவில் கிளர்ச்சி செய்தனர். (தோழர் ஜீவாவும் குமரி மாவட்டக்காரர்தான். ஆனால் நேசமணியோ அப்ப பகுதியின் பெருவாரி மக்களான நாடார் சமுதாயத்தைச் சேர்ந்தவர்)

என்ன செய்வது? புரியவில்லை எம்.ஜி.ஆருக்கு. அப்போது தனக்கு நண்பன், தோழன், தலைவன் என எம்.ஜி.ஆர் எண்ணி வாழ்ந்த தோழர் எம்.கல்யாணசுந்தரத்தைக் கேட்டார்.

'தோழர் ஜீவா பெயரில் போக்குவரத்துக் கழகம் அமைத்திட குமரி மக்கள் எதிர்க்கிறார்கள். பதிலாக நேசமணி பெயரை வைக்கச் சொல்கிறார்கள். நான் நேசமணிக்கு வேண்டுமானால் வேறு மாவட்டத்தில் வைக்கலாம் என எண்ணுகிறேன். ஜீவா குமரி மாவட்டக்காரர். தவிர பெயர் வைக்க ஆணை இட்டு விட்டேன். இனி மாற்றுவது எனக்கு என்னவோ நான் ஜீவாவை வீணாக வம்பில் இழுத்து விட்டதுபோல் குற்ற உணர்வு கொண்டுள்ளேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றார்.

''இல்லை எம்.ஜி.ஆர். நீங்கள் சொல்வது தவறு. ஜீவாவுக்கு தமிழ்நாட்டில் எங்கு வேண்டுமானாலும் பெயர் வைக்கலாம். அவர் தமிழ்நாட்டு தலைவர். ஆனால் திரு.நேசமணி அவர்களோ, குமரி மாவட்டத்துக்காக மட்டும் போராடியவர், வாழ்ந்தவர், ஆதலால் அவர்கள் சொல்வது சரி என்றார்.

பிரச்சினை தீர்ந்தது.

ஜீவா போக்குவரத்துக்கழகம் ஈரோட்டிலும் , அமரர் நேசமணி போக்குவரத்துக்கழகம் குமரியிலும் துவங்கியது.



# மக்களுக்கென்று ஒரு தலைவன்



C.P.குப்புசாமி

1964ம் ஆண்டு

டாக்சி டிரைவர்கள் சிலர் ஒன்று சேர்ந்து தமிழ்நாட்டு முதலமைச்சரை சந்தித்து நம் குறைகளைக் கூறி அரசின் உதவி வேண்டும் என டாக்சி தொழிலாளர் சங்கத்தினர் அன்றைய முதலமைச்சர் திரு.காமராஜர் அவர்களைக் காணச் சென்றோம். (அப்போது தமிழ்நாட்டு முதல் மந்திரி கனம் கு.காமராஜ் என்றுதான் பத்திரிகைகள் விளிக்கும்).

என்னோடு வந்தவர்களில் காங்கிரஸ்காரர் ஒருவர் கூட இல்லை. இருப்பினும் பார்க்கப் புறப்பட்டுப் போனோம். வாசலில் துப்பாக்கியுடன் ஒரு போலீஸ்காரர் மட்டும் இருந்தார். நாங்கள் யாரெனச் சொன்னோம். உடனே அனுமதிக்கப்பட்டோம்.

நாலுமுழ கதர் வேட்டியில் முழு நீள கதர் சட்டை அணிந்து கொண்டு கறுமைக்கே அழகு சொல்லும் ஒரு கவர்ச்சிக் கறுப்பு மேனியன், எங்களைப் பார்த்து யார் நீங்கள்? என்ன வேண்டும்? உட்காருங்கள் என்று வந்தவர்க்கு என்ன பிரச்சனையோ என்பது போல் கேட்டார்.

வணக்கம் சொல்லி, நாங்கள் யாரெனச் சொன்னோம்.

பிரச்சினை என்ன? என்றார்.

பேசினோம், பேச்சின் இடையில்.. இப்போது ஆட்டோக்கள் மொத்தமே நகரில் 350தான் ஓடுகிறது. டாக்சிகள் தான் அதிகம். ஆதலால் ஆட்டோவுக்கு அதிகம் பெர்மிட் கொடுங்கள் என்றோம்.

உடனே அவர், 'அதெல்லாம் சரிப்படாது. அது அதிகப் பாதுகாப்பில்லாத வண்டி என்று சொல்லிவிட்டார்.

வந்த நண்பர்களில் ஒருவர் கேட்டார்: நாங்கள் மேல் வாடகைக்கு வண்டி எடுத்து ஓட்டுகிறோம். ஆதலால் வருமானம் போதவில்லை. எங்களுக்கு அரசே வண்டி வாங்கித்தந்தால் அதனை தவணை முறையில் கட்டி வண்டியைச் சொந்தமாக்கிக் கொள்வோம் என்றார்.

ஆவலோடு கேட்டார் அவர்.

அவர் சில விளக்கம் கேட்க, நாங்களும் விபரங்கள் பல சொல்ல கடைசியாக நாளை வாருங்கள் பார்ப்போம் என்றார்.

மறுநாள்.

நாங்கள் காலை அவர் வீட்டுக்கு 9 மணி அளவில் போய் உட்கார.

அந்த மாபெரும் மனிதர்.

தன்னோடு, பாங்கு அதிகாரிகள், அரசின் உயர் அதிகாரிகள் சிலர் என்று சிலரை எங்கள் பிரச்சனைக்காக கூட்டி வைத்திருந்தார்.

வாருங்கள், உட்காருங்கள் என்றார்.

இருக்கிற அதிகாரிகளுக்கு அறிமுகம் செய்வித்தார். பிரச்சினையை அவர்களிடம் அவரே சொன்னார். இவர்களுக்கு நாம் ஏதாவது செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் உங்களை இன்று அழைத்துள்ளேன் என்றார்.

அதிகாரிகள் வழக்கம்போல் வரண்ட பல கேள்விகளைக் கேட்டனர்.

நாங்கள் எங்கள் சக்தி, தரம் இவைகளைச் சொன்னோம்.

இடைஇடையே அந்த பெருந்தலைவரும் தன் கருத்தினைச் சொன்னார்.

பேச்சின் ஒரு கட்டத்தில் 'டாக்சி சொசைட்டி' ஏற்படுத்துவது என்றும் அதன் மூலம் டிரைவர்களுக்கு வண்டி கடனுக்கு வாங்கிக் கொடுப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

''அப்படியானால் டிரைவர்கள் முதலில் எவ்வளவு பணம் கட்ட வேண்டும்?'' என்றார் அந்தப் பெரியவர்.

''முதலில் [illegible] ரூ. கட்டட்டும். பின் மாதாமாதம் தவணை முறையில் பணம் செலுத்தட்டும்'' என்றனர் அதிகாரிகள்.

உங்கள் பதில் என்ன? என்று அந்தப் பெருந்தலைவர் எங்களிடம் கேட்டார்.

நாங்கள் ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்த்துக் கொண்டு பெரிய தொகையைச் சொல்கிறார்களே என்பது போல் முழித்தோம். (அப்போது பியட் வண்டி 12000/-

ரூபாய். 1964ல் இந்தத் தொகை பெரிதுதான்)

'ம்... சொல்லுங்கள் சொன்னால்தானே பிரச்சினை தீரும்' என்றார் பெரியவர்.

'இது பெரிய தொகையாகப்படுகிறது ஐயா'' என்றோம்.

அவர் யோசிக்கலானார்.

அதிகாரிகளைப் பார்த்து என்ன செய்யலாம் என்று கேடடார். அதில் ஒரு அதிகாரி டக் என்று சொன்னார்: இந்தத் தொகை கூட இல்லாத இவர்களுக்கு எப்படி 12000/- ரூ. வண்டியைக் கொடுப்பது? மீதம் எப்படி வசூலிப்பது? இவர்களால் முடியும். வேண்டும் என்றே பொய் சொல்கிறார்கள் என்றார்.

''அவங்களால முடியுமா? முடியாதா என்றா உங்களைக் கேட்டேன். நம்மால என்ன முடியும்னுதான் நான் கேட்டேன்'' என்றார் கோபம் கலந்த உரத்தக் குரலில்.

நிசப்தம்.

படித்த அந்த அதிகாரிகள் அந்த படிக்காத மேதையின் சிங்க முகத்துக்கு முன் கூனிக்குறுகி மிரண்[illegible] போய் நின்றார்.

அவரே பேசினார்

"சரி... அரசு ரூ.500/— மானியமாகத் தரும். மீதம் நீங்கள் கட்ட வேண்டும். இது சம்மந்தமாக அதிகாரிகள் உங்களை அணுகுவார்கள். அரசு அளித்து சட்டச் சிக்கலுக்கும் விடிவு கூறும். என்ன சரிதானே?"

பேசி [illegible] பெருந்தலைவர்.

எல்லோரும் தலையை [illegible]னோம்.

டாக்சி சொசைட்டி உருவானது. பின்னர் சிறிது நாட்களில் 18 பேர் வண்டி வாங்கினர்.

தற்போது அந்த நிறுவனம் உள்ளதா? எனக் கேட்கத் தோன்றும் உங்களுக்கு.

ஆம். அது இல்லை இப்போது.

பலன் பெற்ற பலர் பிறர் பயன்படாதபடி நிறுவனத்தை நிலைகுலைத்தனர்.

அப்படி ஒரு காலம் இந்த மண்ணில் நடந்தது. அந்த காலம்தான் இனிவருமா?

இல்லை அப்படித் தலைவன் தான் இனி கிடைப்பாரா?

அரசு என்பது மக்களுக்கானது [illegible] அதிகார வர்க்கங்களுக்கு இடித்[illegible] காட்ட இனி ஒரு பெருமகன் [illegible]ப்பானா?

லஞ்சமும், ஊழலும், அதிகார மமதையும் கொண்ட அதிகாரிகளும், தலைவர்களும் நிறைந்த நாட்டில், இப்படிச் சம்பவங்கள்தான் இனி நடக்குமா?

## உஷார்... உஷார்...



அலுவலகம் போய் இருந்த மகனை இன்னும் காணோம் நேரமாகிறது. பக்கத்து ஊர் போய் வரவேண்டும். என்ன செய்வது? வீட்டைப் பூட்டி சாவியை பக்கத்து வீட்டுக்காரர் வசம் கொடுத்துவிட்டு ராமசாமி சொன்னார்.

''ஐயா, நானும் என் மனைவியும் பக்கத்து ஊர் போய் வர வேண்டும். எனது மகன் இன்னும் ஆபிசில் இருந்து வரவில்லை. தாங்கள் இந்த சாவியை வைத்திருந்து எனது மகன் வசம் கொடுத்து விடுங்கள் உதவியாக இருக்கும்''.

அவரும் சாவியைப் பெற்றுக் கொண்டு அப்படியே செய்வதாகச் சொன்னார்.

தம்பதிகள் இருவரும் பஸ் ஸ்டாண்ட் போய் பஸ்சுக்காகக் காத்து இருந்தார்கள். பஸ் வந்த பாடில்லை. சிறிது நேரமாயிற்று.

அப்போது

பக்கத்து வீட்டுக்காரர் வேகமாக ஓடி வந்தார் பஸ் ஸ்டாண்டிற்கு. வந்தவர் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க சொன்னார் ''ஐயா, தாங்கள் தவறாக வேறு சாவியை கொடுத்து விட்டீர்கள்'' என்று தந்த சாவியைத் திருப்பிக் கொடுத்தார்.

அப்போது தான் தவறாகக் கொடுத்ததைப் பார்த்தார் ராமசாமி.

உடனே சொன்னார். ''ஐயா, இதற்காகவா இப்படி ஓடி வந்தீர்கள். சிரமத்திற்கு மன்னிக்கவும். நான் சீக்கிரத்தில் திரும்பி வந்து விடுவேன். மகன் வந்தால் வெளியில் நிற்கட்டும்'' என்று சாவியை வாங்கிக் கொண்டார்.

பஸ்சும் வந்தது. பயணமும் தொடர்ந்தது. பக்கத்து வீட்டுக்காரர் மனமொடிந்து போனார்.

புரிகிறதா?

— அஜாய்






ஆகஸ்ட் '91 'மார்க்சிஸ்ட' மாத இதழில் வெளி வந்த கட்டுரையில் ஒரு பகுதி.

வாசகர்கள் இம்மாதிரி விஷயங்களைப் படித்து ஆய்ந்திட எண்ணி இதனை வெளியிடுகிறோம்.

இக்கட்டுரை உங்கள் சிந்தனையில் ஏற்படுத்தும் ஐயப்பாடுகளையும், அல்லது காலம் காலமாக நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கைகள் மேல் இது ஒரு தாக்குதல் என்று எண்ணினாலோ விபரமாக டாக்சிக்கு எழுதுங்கள்!

உடன் கட்டுரை ஆசிரியரிடம் இருந்து பதில் வாங்கி அச்சிடுகிறோம். [redacted] ஆசிரியர்.

பி.ஆர்.பரமேசுவரன்
(சி.பி.ஐ. (எம்) மத்திய கமிட்டி உறுப்பினர்)

### உலகம் எப்படித் தோன்றியது

ஆன்மீகவாதிகளும் மதவாதிகளும் இவ்வுலகம் ஏதோ ஒரு தெய்வீக சக்தியினால் படைக்கப்பட்டது என்ற கருத்தை ஆழமாகப் பரப்பியுள்ளனர். மக்களிடம் அது ஒரு நம்பிக்கையாகவே வேரூன்றியுள்ளது. அந்த தெய்வீக சக்திக்கு ஒவ்வொரு மதத்தவர் வெவ்வேறு பெயர்கள்- பரப்பிரம்மம், கர்த்தர், அல்லா என்று சூட்டியுள்ளனர். காணும் பொருட்களையெல்லாம் யாராவது ஒருவன் செய்வதைப் பார்க்கும் பாமர மக்கள் அதே போல் இந்த உலகமும் யாரோ ஒருவனால் படைக்கப்பட்டுத்தான் இருக்க வேண்டும் என்று நம்புகின்றனர். ஆதி சங்கரர் குயவன் இல்லையேல் பாண்டம் ஏது என்றார். ஆனால் அந்த குயவன் எப்படித் தோன்றினான். அவனைப் படைத்தது யார். இக்கேள்விக்கு எந்த மதவாதிகளும் இன்று வரை பதிலளிக்கவில்லை. அந்தக் குயவன் செய்த பாண்டத்திற்கான மண் எங்கிருந்து வந்தது? அதற்கும் பதில் இல்லை.

இயற்கையைப் பற்றி மனிதன் ஏதும் அறியாத காலத்தில் உருவாக்கப்பட்ட கருத்துக்கள் இவை. உலகம் உருண்டையா தட்டையா என்பது கூட 400 ஆண்டுகளுக்கு முன்னால் வரை நிரூபிக்கப்படவில்லை. நாம் வாழும் இந்த பூமி இப்பிரபஞ்சத்திலுள்ள கோடானு கோடானு கோடி நட்சத்தரங்களை விட ஒரு சிறிய கிரகம் என்பதை அறியாத காலம். பூமி தான் பிரபஞ்சத்தின் மையம் என்று நம்பிவந்த காலம் சூரியன் காலையில் கிழக்கே உதித்து மாலையில் மேற்கே மறைவதனால் தான் இரவு பகல் ஏற்படுகிறது என்று நம்பி வந்த காலம். பூமி தான் சூரியனைச் சுற்றி வருகிறது என்பதை அறியாத காலம், பூமியிலிருந்து 15 கோடி கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பூமியை விட பன்மடங்கு பெரிதான நெருங்கினால் பொசுங்கிப் போகும் அளவுக்கு உஷ்ண மண்டலமான சூரியனுடன் கலவி புரிந்து குந்தி தேவி கர்ணன் என்ற மகனை பெற்றெடுத்தாள் என்று மகாபாரதத்தில் கதை புனைந்த காலம். கோடைக்கால வெயிலையே தாங்கமுடியவில்லை. இத்தகைய நம்பிக்கைகள் அனைத்தும் அபத்தமானவை என்று விஞ்ஞானம் இன்று நிரூபித்துள்ளது. சூரியனும் சந்திரனும் தேவர்கள் என்று இன்றும் நம்புகின்றனர். விஞ்ஞான அறிவுக்கும் இதற்கும் சம்பந்தம் ஏதும் இல்லை.

இருந்தாலும் ஆன்மீக வாதிகளும் தங்களின் பழைய நம்பிக்கைகளிலேயே பற்றி நிற்கின்றனர். அதன் அடிப்படையிலான ஜாதகம், யாகம், பூசை, வழிபாடுகள், பிராத்தனைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள் அனைத்தையும் பின்பற்றி வருகின்றனர்.

### பிரபஞ்சம் யாராலும் படைக்கப்பட்டதல்ல

இப்பிரபஞ்சம் ஏதோ ஒரு சக்தியினால் படைக்கப்பட்டது என்பது விஞ்ஞான அறிவுக்கு பொருந்தாதது. சூன்யத்திலிருந்து-வெறுமையிலிருந்து யாரும் எதையும் உண்டாக்க முடியாது. இப்பிரபஞ்சம் என்றென்றும் இருந்து வருவது. இயங்கிக் கொண்டேயிருப்பது. அது ஆதி அந்தம் அற்றது- தொடக்கமும் முடிவும் இல்லாதது. ஆன்மீக வாதிகள் கூறுவது போல் ஆதி அந்தம் அற்றது பரமாத்மா அல்ல. பரமாத்மா என்ற கருத்தே மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் மனிதனால் உருவாக்கப்பட்டது தான். இப்பிரபஞ்சத்தைப் பற்றி மனிதன் அறிய வேண்டியது இன்னும்

ஏராளம் இருக்கலாம். விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் அறிந்தவைகளும் ஏராளம். இன்று அறியாததை நாளை அறிய முடியும் என்ற நம்பிக்கையோடு விஞ்ஞானம் முன்னேறி வருகிறது.

## பிரபஞ்சத்தின் அற்புதங்கள்

நமது பூமியும் கோடானு கோடி நட்சத்திரங்களும் அந்த நட்சத்திரங்களைக் கொண்டது கூட்டங்களும் (Galaxy) அவைகளின் சூரியன்களும் கொண்ட இப்பிரபஞ்சம். இரவில் ஆகாயத்தில் நாம் காணும் நட்சத்திரங்கள் நமது பூமியை விட பெரியது.

> சூரியனுடன் கலவி புரிந்து குந்திதேவி கர்ணன் என்ற மகனைப் பெற்றெடுத்தாள் என்று மகாபாரதத்தில் கதை புனைந்த காலம்.

பல நட்சத்திரங்கள் பூமியிலிருந்து வெகு தூரத்தில் உள்ளன. அதன் தூரத்தை எப்படிக் கணக்கிடுவது? விஞ்ஞானிகள் அதற்கும் ஒரு வழி கண்டுபிடித்துள்ளனர். ஒளி ஒரு நொடியில் 3 லட்சம் கிலோ மீட்டர் வேகத்தில் செல்லும். இந்த கணக்கின்படி ஒரு மணி நேரத்தில் 108 கோடி கிலோ மீட்டர் தூரம் செல்லும். இந்த வேகத்தில் ஓராண்டு பயணம் செய்தால் எவ்வளவு தூரமோ அதைத்தான் ஒரு ஒளியாண்டு தூரம் என்கிறோம். பூமிக்கு மிக அருகாமையிலுள்ள நட்சத்திரங்களின் ஒளி பூமியை வந்தடைய நான்கு ஒளியாண்டுகள் ஆகின்றன. நாம் இன்று பெறுகின்ற நட்சத்திரங்களின் ஒளி நான்கு ஒளியாண்டுகளுக்கு முன் அதன் பயணத்தைத் தொடங்கியது என்று அர்த்தம். இன்னும் ஏராளமான நட்சத்திரங்களின் ஒளி பூமிக்கு வந்து சேரவே இல்லை. ஆனால் நாம் இங்கு சில நட்சத்திரங்களின் பேரைச் சொல்லி நட்சத்திர பலன் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இத்தகைய கோடானு கோடி நட்சத்திரங்களைக் கொண்டது ஒரு கேலக்சி. ஒரு கேலக்சியில் ஒரு சூரியன். இவ்வளவு நட்சத்திரங்களும் சூரியனும் அடங்கிய ஒரு கேலக்சியின் பரப்பளவு ஒரு லட்சம் ஒளியாண்டு தூரம். ஒரு கேலக்சி அதனுடைய மையத்தில் 20 கோடி ஆண்டுகளுக்கு ஒரு முறை சுற்றி வருகிறது. எல்லையற்ற இப்பிரபஞ்சத்தில் இத்தகைய கோடிக்கணக்காண கேலக்சிகள் உள்ளன. ஒரு கேலக்சியிலிருந்து இன்னொரு கேலக்சிக்குச் செல்வதற்கான தூரம் ஒரு கோடி ஒளியாண்டுகளுக்கும் அதிகமானது. கேலக்சியின் பயணத்தல் தெரிவது தான் பால் வெளி.

## சூரியனும் பூமியும்

நமக்கு 'தினசரி உஷ்ணமும் ஒளியும் தரும் சூரியன் பூமியிலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது. ஒளியாண்டு கணக்கில் ஒரு நொடியில் 3 லட்சம் கிலோமீட்டர் வேகத்தில் அதன் உஷ்ணம் கலந்த ஒளி பூமியை நோக்கி வருகிறது. சூரியன் பூமியிலிருந்து 15 கோடி கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. ஆகவே அதன் ஒளி பூமியை வந்தடைய 8 நிமிடங்கள் ஆகின்றன. அப்படியானால் 8 நிமிடங்களுக்கு முந்திய சூரியனின் ஒளியைத்தான் நாம் பெறுகிறோம் என்று பொருள்.

> ஏராளமான நட்சத்திரங்களின் ஒளி பூமிக்கு வந்து சேரவே இல்லை. ஆனால் நாம் இங்கு சில நட்சத்திரங்களின் பேரைச் சொல்லி நட்சத்திர பலன் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

உருண்டை வடிவிலான இந்த பூமி ஒரு நாளைக்கு ஒரு முறை தன்னைத்தானே சுற்றிக் கொள்வதால் உலகம் முழுவதும் ஒவ்வொரு நாளும் சூரிய ஒளி கிடைக்கிறது. இதனால்தான் இரவும் பகலும் ஏற்படுகிறது. அதே நேரத்தில் பூமி சூரியனைச் சுற்றி வரவும் செய்கிறது. இதற்காகும் காலம் முன்னூற்றி அறுபத்தைந்தே கால் நாள். இதன் காரணமாகவே நாட்டுக்கு நாடு பருவ காலங்கள் மாறுகின்றன. இன்று எந்த மதவாதியும் மறுக்க முடியாத இந்த உண்மைகளை; கோபர்நிகஸ் எடுத்துக் கூறிய பிரபஞ்ச உண்மைகளை விஞ்ஞான ரீதியாகக் கண்டறிந்து மனித சமூகத்திற்கு மாபெரும் சேவை புரிந்ததற்காகத் தான் மதக் கொள்கைக்கு விரோதமான கருத்துக்களை கூறியதாகக் குற்றஞ்சாட்டி கலீலியோவை ஒன்பது ஆண்டு காலம் வீட்டுக்காவலில் வைத்துக் கொன்றது கத்தோலிக்கத் திருச்சபை. ஜியார்டனோ புரோனோ கத்தோலிக்கத் திருச்சபைத் தீர்ப்பின்படி உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டார்.

## பூமியின் தோற்றம்

கண்ணுக்குப் புலப்படாத, ஒரு சென்டிமீட்டரில் 10 லட்சத்தில் ஒரு அம்சம் மட்டுமே பரிமாணம் உள்ள அணுக்களில் கூட நியூட்ரான், புரோட்டான், எலெக்ட்ரான் ஆகிய முரண்பட்ட அம்சங்கள் அதனை இயங்கச் செய்கிறது. பிரபஞ்சம் முழுமைக்கும் அத்தகைய அணுக்கள் தான் அடிப்படை. இந்த முரண்பாடான அம்சம்தான் இடைவிடாத இயக்கத்திற்குக் காரணம். ஆகவே எல்லையற்ற பிரபஞ்சத்திலும் அதன் ஒவ்வொரு கிரகத்திலும் முரண்பட்ட சக்திகளின் மோதலும் இயக்கமும் வளர்ச்சியும் ஏற்படுகிறது. இதன் விளைவாக சில கிரகங்கள் சிதறவும் புதிய கிரகங்கள் தோன்றவும் செய்யலாம். இதெல்லாம் கோடிக்கணக்கான ஆண்டுகளின் வளர்ச்சிப் போக்கில் நடக்கக்கூடியது. எல்லையற்ற பிரபஞ்சத்தில் எங்கு எப்போது என்ன நடக்கிறது என்பது தெரியாமலிருக்கலாம்.

இவ்வாறு சுமார் 500 கோடி ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட சிதறல்களில் தான் வேறு கிரகங்களின் துகள்கள் இன்றைய பூமியாகப் பரிணமித்தது. இது பல கோடி ஆண்டுகள் தீப்பிழம்பாகவே இருந்தது. அப்போது இதனை பரமாத்மா தான் படைத்தவர் என்று பேசுவதற்கோ அல்லது வெறும் மாயா தோற்றம் என்று கூறுவதற்கோ எந்த ஜீவாத்மாவும் இருக்கவில்லை. நெருப்பு அணைந்து பூமி குளிர்ந்து நிலமாகவும் வாயுவாகவும் பரிணமிக்கவே 200 கோடி ஆண்டுகளாயின. 300 கோடி ஆண்டுகளுக்கு முன் வரை புல் பூண்டு கூட முளைக்கவில்லை. உலகமே உயிரற்றதாக இருந்தது. ஆகவே நாம் வாழும் பூமி இன்றுள்ள நிலையில் எந்த சக்தியினாலும் படைக்கப்பட்டதல்ல. பிரபஞ்சத்தின் இயக்கப் போக்கில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளால் பூமி தோன்றியது. நூற்றுக்கணக்கான கோடி ஆண்டுகளின் பரிணாம மாறுதலில் தான் அது இன்றைய கட்டத்தை அடைந்துள்ளது. இப்போதும் நாம் வாழும் பூமியின் அமைப்பில் இடைவிடாத இயக்கமும் மாறுதலும் ஏற்பட்டு வருகிறது. நம்மால் உணர முடியாமல் இருக்கலாம். பூமி ஒரு நாளைக்கு ஒரு முறை தன்னைதானே சுற்றிக் கொள்வது கூட நம்மால் உணர முடிய வில்லை. விஞ்ஞான அறிவைக் கொண்டுதான் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. விஞ்ஞானமும் அனுபவமும் நிரூபித்துள்ள இந்த உண்மைகளை இன்று ஆன்மீக வாதிகளாலும் மறுக்க முடியாது.

> பூமி ஒரு நாளைக்கு ஒருமுறை தன்னைத்தானே சுற்றிக் கொள்வது கூட நம்மால் உணர முடியவில்லை. விஞ்ஞான அறிவைக் கொண்டு தான் புரிந்து கொள்ள வேண்டி உள்ளது.

## உயிரின் தோற்றம்

இன்றைய வடிவிலான மனிதனும் தாவரங்கள் உள்ளிட்ட இதர உயிரினங்களும் அறிய முடியாத எந்த சக்தியினாலும் படைக்கப்பட்டதல்ல. திடீரென தோன்றியதும் அல்ல. இவைகளெல்லாம் நீண்ட கால பரிணாம வளர்ச்சியில் தோன்றியவைகள், ஏற்கனவே குறிப்பிட்டது போல் கோடிக்கணக்கான ஆண்டுகளின் வளர்ச்சிப் போக்கில் பூமி குளிர்ந்து நிலமாகவும் நீராகவும் நெருப்பாகவும் வாயுவாகவும் பரிணமித்தபோது தான் உயிரினங்கள் தோன்றுவதற்கான தட்பவெப்ப நிலை ஏற்பட்டது. ஆரம்பகால உயிரினங்கள் நீரில் தான் தோன்றின. ஒற்றைச் செல் ஜீவிகளான வைரஸ்களும் பாசிகளும்தான் முதல் உயிரினங்கள். கடவுள் கூட முதலில் மீனாகத்தான் பிறந்தார் என்று தான் தசாவதாரக் கதை கூறுகிறது. மகா விஷ்ணுவின் முதல் அவதாரம் மச்சாவதாரமாம். பூமியில் தோன்றிய ஹைட்ரஜன், ஆக்சிஜன், நைட்ரஜன், கார்பன், ப்ரொட்டீன் போன்ற பொருள்களின் சேர்க்கையிலிருந்து தான் உயிர் அணுக்கள் தோன்றியுள்ளது. 300 கோடி ஆண்டுகளுக்கு முன் ஆரம்பமான உயிரின் தோற்றம் நீண்ட நெடுங்கால வளர்ச்சியில் 30 லட்சம் ஆண்டுகளுக்கு முன் மனிதக்குரங்கின் நிலையை அடைந்தது. ஒரு வகையான குரங்கினம் அது, சந்தித்த வாழ்க்கைச் சூழ்நிலையில் வாழ்க்கைத் தேவையின் காரணமாக பின்னங்கால்களை ஊன்றி நின்று முன்னங் கால்களால் தனக்குத் தேவையான பொருட்களை சேகரிக்கத் தொடங்கியது. பல லட்சம் ஆண்டுகள் நடந்த இக்கடுமையான முயற்சியில் இரு கால்களை ஊன்றி இரு கால்களை கைகளாக்கி நிமிர்ந்து நடந்த ஓர் உயிரினத்தைத் தோற்றுவித்தது. அதனால் அதனுடைய முதுகெலும்பும் மூளையும் வளர்ச்சியடைந்தது. அவைகள் படிப்படியாக இன்றைய மனிதனின் தோற்றத்தைப் பெற்றன. இதற்கு பல லட்சம் ஆண்டுகளாகியது. எவ்வளவு காலம் என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியாது.

இது தான் உலகமும் உயிரினங்களும் உருவானதன் சுருக்கமான வரலாறு. இவ்வாறு மனிதன் வரையிலான உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியைப் பற்றி சார்லஸ் டார்வின் என்னும் ஆங்கிலேய உயிரியல் விஞ்ஞானி ஆய்ந்தறிந்து விஞ்ஞான ரீதியாக நிரூபித்துள்ளார். கலீலியோவைப் போலவே 'மதநம்பிக்கை கொண்டிருந்த இந்த விஞ்ஞானியின் கண்டுபிடிப்புகள் உயிர்களை ஆண்டவன் படைத்தான் என்னும் கருத்துக்கு பலமான அடியாக இருந்தது. இவர் இந்த உண்மையைக் கண்டறிந்து வெளிப்படுத்தியது 19வது நூற்றாண்டில். அக்காலத்தில் பிரிட்டனில் ஜனநாயக ஆட்சிமுறை இருந்ததினால் இவர் தப்பித்தார்.

> ஆரம்பகால உயிரினங்கள் நீரில் தான் தோன்றின. ஒற்றைச்செல் ஜீவிகளான வைரஸ்களும் பாசிகளும் தான் முதல் உயிரினங்கள். கடவுள் கூட மீனாகத்தான் பிறந்தான் என்று தான் தசாவதாரக் கதை கூறுகிறது. மகா விஷ்ணுவின் முதல் அவதாரம் மச்சாவதாரமாம்.

இவ்வாறு மனிதன் தோன்றி அவன் ஓரளவு நாகரீக வளர்ச்சியடைந்த பிறகுதான் பரமாத்மாவையும் பல்வேறு கடவுள்களையும் தத்துவங்களையும் மதங்களையும் படைத்தான். கடவுள் மனிதனைப் படைக்கவில்லை. மாறாக மனிதன் தான் கடவுளைப் படைத்தான் என்பது தான் உண்மை.

●

## ஏட்டையா - 404

அடேய்...!
பொறுக்கிப் பயமவனே
பொய்யேனும் சொல்லாமே
இருக்கிறத சொல்லிப்புடு!
இல்லேனா
நொறுக்கிடுவேன்!

தண்ணி போட்டவன்நான்
தள்ளாடி நடக்கலே
தண்ணி போட்டுக்கிட்டு
தள்ளாடியா நடக்கறே?

லாக்கப்ல தள்ளிவச்சு
லத்தியாலே அடிச்சிடுவேன்
பாக்கட்ல இருக்கிறத
பக்குவமா கொடுத்துப்புடு!

எம்மாந் தைரியம்டா
என்னையா டபாய்க்கிற
சொம்மாப் புளுவாதடா
சோமாறிப் பயலே...!

பேட்டைப் பூராவும்
பெரியவங்க சின்னவங்க
ஏட்டையா 404னா
எந்திரிச்சு நிப்பாங்கடா

சந்தியிலே குந்திக்கிட்டு
சவ்டாலா பண்றே...
எந்திரிடா டேசனுக்கு
இன்னாடா சொல்றே...?

எந்திரிக்க மாட்டியா?
இன்னாப்பா சொல்றே...?
மந்திரி பியூனுக்குநீ?
மருமவப் புள்ளையா..?


அண்ணே எந்திரிங்க
அடையாளம் தெரியாம
என்னமோ நெனச்சு
ஏதேதோ பேசிப்புட்டேன்

இந்தாங்க அண்ணே
இருக்கிறத வாங்கிக்கிங்க
எந்திரிங்க அண்ணே...!
இந்தாப்பா டாக்ஸி...!

● மாங்குயில்
பழனி சுந்தரேசன்

# நிர்வாணம்

219977



**வேந்தன்**

சேகர் மீது சுமத்தப்பட்ட அந்தக் குற்றச்சாட்டைக் கேட்டதும் என்னால் நம்பமுடியவில்லை. ஆனால் நான் நம்பும் மட்டும் யாரும் காத்துக் கொண்டிருக்கவில்லை. அவன் செய்த அந்தக் குற்றத்திற்காக அவன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள், ஏற்கனவே அவனைப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போய் விட்டார்கள்!

''வேண்டுமானால் சப் இன்ஸ்பெக்டரிடமே போய் விபரமாகக் கேட்டுத் தெரிந்து கொள்வோம்'' என்று பக்கத்தறை நண்பர் யோசனை சொன்னார். அது உண்மையாகவே எனக்கு சமயோஜிதமாகச் சொல்லப்படும் யோசனையா? அல்லது அவனையும் என் நண்பனென்று சொல்லிக் கொண்டிருந்தேனே என்பதற்காகச் செய்யப்படும் நையாண்டியா? என்பதையும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதை ஏற்கவோ மறுக்கவோ முடியாத நிலையில் மௌனமாகவேயிருந்தேன். பக்கத்தறை நண்பரும் என் பதிலுக்காகக் காத்திராமல் ஏதோ சொல்லத் தோன்றியதைச் சொல்லிவிட்டவர் போலத் திரும்பிப் போய்விட்டார்.

எனக்கு வேண்டும். இப்படிப்பட்ட ஒருவனை நண்பனென்று சொல்லி உடன் இருக்க வைத்துக் கொண்ட குற்றத்திற்காக இந்த தண்டனை வேண்டியதுதான். ஆனாலும் அவன் அதற்காக இவ்வளவு கீழ்த்தரமாக நடந்து கொண்டிருக்கவும் வேண்டாம். என்னிடம் பரிதாபமாவது காட்டியிருக்கலாம்.

அவன் எனது பால்ய நண்பன். ஒரே ஊரைச் சேர்ந்து நாங்களிருவரும் பள்ளிப் படிப்பு முடியும் வரை நெருங்கிய நண்பர்கள் அதன் பிறகு ஐந்தாறு வருடங்களாய் எங்கள் தொடர்பு அறுந்துவிட்டது. உத்தியோகம் என்னை ஊரை விட்டு விரட்டி விட்டதுதான் அதற்குக் காரணம்.

மூன்று மாதங்களுக்கு முன்புதான் தற்செயலாக அவனைக் கடைத் தெருவில் சந்தித்தேன். வேலை நிறுத்தப் போராட்டத்தில் பங்கு கொண்டதால் செய்து கொண்டிருந்த வேலை போய்விட்டதாகவும், வேறு வேலை தேடிக் கொண்டலைவதாகவும் சொன்னான். அந்த விசாரணையுடன் அவனை அனுப்பி வைத்துவிட என் மனம் இடம் கொடுக்கவில்லை. பிறர் கஷ்டங்களையெல்லாம் தன்னுடையதாகப் பாவித்துக் கொண்டு வருத்தமடைவதும், அதைத் தவிர்க்க முயல்வதும் அவனோடு ஒட்டிவிட்ட பண்புகள். என் விஷயத்திலும் கூட அவன் சில சமயங்களில் அப்படி நடந்து கொண்டிருக்கிறான். அதையெல்லாம் நினைவுபடுத்திக் கொண்டுதான் அவன் விருப்பத்திற்கு மாறாகவே என்னுடன் உரிமையுடனிருக்க வேண்டுமென்று வற்புறுத்தி அழைத்து வந்தேன். வேலை கிடைத்த பிறகுங்கூட அவன் என் அறையிலேயே தங்கிக் கொள்ளலாம் என்றும் சொல்லியிருந்தேன். இன்று அவன் நடந்துகொண்ட விதம் என் தாராளத்தன்மையையே ஏமாளித்தனமென்றாக்கி விட்டது.

வெளியில் எப்படித் தலைகாட்டுவதென்றே தோன்றவில்லை. எவ்வளவு நேரந்தான் அறைக்குள்ளேயே அடைபட்டுக்கிடக்க முடியும்? அறைக்குள்ளிருந்தபடியே வெளியே பார்த்தேன். தெருவின் எதிர் சாரியிலிருந்த இரண்டொரு கடைக்காரர்களும், வீதியில் நடப்போரும்கூட என் அறையை நோட்டம் விட்டபடிதான் தங்கள் வேலையையும் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

நகரின் பரபரப்பில்லாத இந்த ஒதுக்குப்புறமான இடத்தில் குடியிருப்பதில் இது ஒரு அசௌகரியம். ஆட்களை அடையாளம் வைத்துக் கொள்ளவும், அவர்களின் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கும் இவர்களுக்கெல்லாம் நேரம் கிடைத்துவிடுகிறது. ஆனால் நகருக்கு மத்தியில் என் தகுதிக்கு வாடகை கட்டுப்படியாகும்படி எப்படி ஒரு இடம் பிடித்துவிட முடியும்?

புழக்கடையிலிருக்கும் ஐந்தடி உயரமுள்ள மதில் சுவரைத் தாண்டிக் குதித்தால் கிறிஸ்துவர்களின் பெரிய கல்லறைச் சதுக்கம்; அறைக்கு எதிரிலும் பக்கத்திலும் சவப் பெட்டிகள் செய்யும் தச்சுப் பட்டறைகள்; பூவும், சாம்பிராணியும், மெழுகுவத்தியும் விற்கும் சில்லறைக் கடைகள், காகிதப் பூக்கள் ஒட்டி சவப்பெட்டிகளை அலங்கரிப்பதற்காக கையில் கத்திரிக்கோல் பசைக் கிண்ணத்துடன், கட்கத்தில் வர்ணக் காகிதச் சுருளுடனும் நடமாடும் சவக் கலைஞர்கள்; மரித்த ஆத்துமாக்கள் மோட்சத்தை அடைவதற்காக ஆண்டவரிடம் மன்றாடிவிட்டு சவத்துடன் வந்தவர்களிடம் இரண்டொரு பைசாவுக்காக மன்றாடும் மரிக்காத ஆத்துமாக்களான பிச்சைக்காரர்கள், தினந்தவறாமல் காணக்கிடக்கும் இரண்டு மூன்று சவ ஊர்வலங்கள், இவைகள்தான் இந்த வட்டாரத்தின் சூழ்நிலை. ஆரம்பத்தில் என்னவோ போலிருந்தாலும் இப்போது எனக்கு இதுவும் பழகி விட்டது. இங்கிருப்பவர்களும் என்னை யாரென்று தெரிந்து வைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் என் கண்ணில் விழிக்கவும் இப்போது எனக்கு யோக்கியத்தை இல்லாமல் போய்விட்டது.

திரும்பத் திரும்ப நினைத்தாலும் அவன் இப்படிச் செய்திருப்பானா என்றுதான் கேட்கத் தோன்றுகிறது. ஆனால் போலீசார் விசாரணை செய்து துலக்கிய விஷயம் கூடவா பொய்யாகிவிட முடியும்?

நடந்தது இதுதான். அங்கு நடமாடிக் கொண்டிருந்த இளம் வயது பிச்சைக்காரி ஒருத்திக்கு சேகர் ஒரு புடவையை அன்பளிப்பாகக் கொடுத்திருக்கிறான்!

பிச்சைக்காரிக்கு புடவை தானம் செய்வது சட்டப்படி குற்றமில்லைதான்; ஆனால் அதற்காக அந்தப் புடவையை சம்பாதித்த முறையில்தான் அவன் பயங்கரமாகவும் மனிதத் தன்மையை மீறியும் நடந்து கொண்டிருக்கிறான். புதைக்கப்பட்ட ஒரு பெண் பிரேதத்தின் மீதிருந்தே அவன் அந்தச் சேலையை அவிழ்த்திருக்கிறான். மறுபடியும் அந்தப் பிரேதத்தை நிர்வாணமாகவே போட்டுப் புதைத்துமிருக்கிறான். இப்படிப்பட்ட ஒருவனுக்கு நான் நண்பனாய் இருந்தேன் என்பதைவிடவா நான் ஒரு பெரிய குற்றத்தைச் செய்துவிட முடியும்?

கோர்ட்டில் கூட அவன் தன் குற்றத்தை மறுக்கவில்லையாம். ஆறுமாதத் தண்டனை பெற்று சிறைக்கும் போய் விட்டான். இந்தச் சுற்று வட்டத்திலுள்ள அத்தனை பேருமே கோர்ட்டிற்குப் போய் அவன் விசாரணையை வேடிக்கைப் பார்த்தார்கள். நான் அந்தப் பக்கமே திரும்பவில்லை. அந்தக் கொடியவனின் முகத்தில் விழிப்பதுகூட பாபமாகி விடுமென்று போகாமலேயே இருந்துவிட்டேன். எல்லாமே சொல்லக் கேள்விதான்.

அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு ஆறு மாதங்களாகிவிட்டன. அதற்கு மேலேயுங்கூட இருக்கலாம். நான் அதை மறக்கத்துவங்கிய சமயத்தில் இன்று வந்த கடிதம் அதை மறுபடியும் நினைக்கச் செய்துவிட்டது. கடித உறையில் அனுப்பியவர் விலாசமில்லை. தபால் முத்திரையிலிருந்து திருச்சிக்கும் சென்னைக்குமிடையே எங்கோ ரயிலில் சேர்க்கப்பட்டது என்று தான் தெரிந்துகொள்ள முடிந்தது. அவன்தான் எழுதியிருந்தான். படிக்கவே மனம் வரவில்லை. என்ன



தான் எழுதியிருக்கிறான் என்று படித்துவிட்டுத்தான் கிழித்தெறிவோமே என்ற முடிவோடு படிக்கத் துவங்கினேன்.

கடிதம் இதுதான்:

அன்புள்ள வாசு,

என்னால் உனக்கேற்பட்டிருக்கும் அவமானத்திலிருந்து நீ இன்னும் விடுபட்டிருக்கமாட்டாய். அதற்குள் இதை எழுத நேர்ந்துவிட்டதற்காக என்னை மன்னித்துவிடு. நான் உனக்கு எவ்வளவுதான் கொடுமை இழைத்திருந்தாலும் இதைப் படிக்கும் அளவுக்காவது நீ எனக்குக் கருணை காட்டியே தீர வேண்டும். இதுவே எனது கடைசி வேண்டுகோள்.

நான் கொடுமையான குற்றம் புரிந்தவன்தான். அதற்குரிய தண்டனையையும் மனமுவந்தே அனுபவித்துத் தீர்த்து விட்டேன். ஆனால் அந்தக் குற்றத்திற்கான காரணங்கள் என்று மற்றவர்கள் யூகித்து நிலை நாட்டியது வேறு; உண்மையில் நடந்ததே வேறு. காரணம் எதுவாயிருந்தாலும் சரிதான், குற்றம் குற்றம்தான். நான் அதை இப்போதும் மறுக்க முனையவில்லை.

ஆனால் அந்தக் குற்றத்திற்கான காரணங்கள் என்னளவில் நியாயமானவை. சட்டத்தின் எதிர் தட்டில் ஏற்றி நிறுத்தி நீதியை என் பக்கம் சாய்த்துக் கொள்ளுமளவுக்கு அவைகள் வலுவற்றவைதான். சமுதாயத்தில் ஒருவிதமான ஒழுங்கை நிலை நிறுத்துவதற்கென்றே ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள் எப்போதுமே தர்ம நியாயத்தின் அடிப்படையிலேயே தான் நிர்ணயிக்கப்படுகின்றன என்று எப்படிச் சொல்லிவிட முடியும்? அதை நினைத்துதான் சட்டத்தின் முன் குற்றவாளியானாலும், எனக்குள்ளேயே ரகசியத்தில் வெட்கப்பட வேண்டாத குற்றவாளியாகவே நான் என் தண்டனையை அனுபவித்துத் தீர்த்து விட்டேன்.

எனக்கும் அந்தப் பிச்சைக்காரிக்கும் மிகக் கேவலமான முறையில் தொடர்பிருந்ததாகவும், அதனால் தான் அவளுக்கு அந்தப் புடவையை அன்பளிப்பாகக் கொடுத்ததாகவும் விசாரணையின்போது என்மீது குற்றம் சாட்டினார்கள். நான் அதை அடியோடு மறுத்தேன். அவளுங்கூட மறுக்கவே செய்தாள். ஆனால் அதைக் கேட்டவர்கள் அத்தனைபேருமே ஏளனமாகச் சிரித்தார்கள். பெண்ணுக்கும் ஆணுக்கும் ஒருவகையில்தான் தொடர்பிருக்க முடியுமென்று இவ்வளவு திட்டவட்டமாக முடிவு செய்துவிட்டார்களே என்று நினைத்து நானும் சிரித்து விட்டேன். அந்த என் சிரிப்பு அவர்கள் எண்ணத்தை உறுதிப்படுத்திவிட்டது.

பொழுது போகாத நான் உன் அறைக்குள் உட்கார்ந்தபடி வீதியைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போதுதான் அவள் என் பார்வையில் அகப்பட்டாள். வயது அவளுக்கு வாலிபத்தின் முழுப்பொலிவையும் அளித்திருந்தது. வறுமை அவளை நிர்வாணமாக்கியிருந்தது. கொடுமையான வறுமையும் ஒரு வகையில் வாலிபக் கண்களுக்கு விருந்தளிக்க முடியுமென்று நான் அவள் மூலம்தான் தெரிந்துகொண்டேன். அவள் அங்கிருந்தோரில் அநேகருக்குக் கண் குளிர்ந்த காட்சிப் பொருளாகவே ஆகிவிட்டாள். கலை வளர்க்கும் நீச்சலுடை அழகிகள் போல அவளும் அப்படிக் காட்சிப் பொருளாவதை விரும்பியிருந்தால் நானும் அதைப் பொருட்படுத்தியிருக்க மாட்டேன். லஜ்ஜை மிகுந்த அவள் முகம், மனம் படும் வேதனையைப் பார்வையில் பிரதிபலித்துக் கொண்டிருந்ததுதான் என் உள்ளத்தை உலுக்கிற்று.

சிறுகச் சிறுகத் தின்று பழகிவிட்டால் விஷமுங்கூட சுவைமிகுந்த பண்டமாகிவிடுமாம். வறுமையின் கோரக் காட்சிகளையே பார்த்துப் பழகிவிட்ட நம்மவர்களும் அப்படித்தான் வறுமையின் வயிற்றிலேயே பிறந்துவிட்ட அந்தத் துன்பக் காட்சியையும் திறந்த கண் மூடாமல் பரவசத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஏனோ என்னால் அப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை.

என் பார்வையை மறித்தபடி, அவளுக்கும் எனக்கும் இடையே இந்த வீதியில் சென்ற சவ ஊர்வலம் என் கவனத்தைக் கவர்ந்தது.

அலங்கரிக்கப்பட்ட சலவண்டி ஒன்று நகர்ந்து கொண்டிருந்தது. அதில் ஒரு பெண்ணின் பிரேதம் கிடத்தப்பட்டிருந்தது. அந்தப் பிணத்திற்கு உடுத்தியிருந்த கோடிப் புடவை என் கண்களை உறுத்திற்று. அந்தக் காட்சி அடுத்த சில வினாடிகளில் என் கருத்தையே குழப்பி விட்டது. துணிவோடு ஒரு முடிவுக்கும் வந்துவிட்டேன். அன்றிரவுதான் அந்தக் கொடுமையான குற்றத்தையும் புரிந்து விட்டேன்.

புதைக்கப்பட்ட ஒரு பிணத்தைத் தோண்டி எடுத்து நிர்வாணமாக்கி மீண்டும் புதைப்பதென்பது மன்னிக்கக்கூடாத குற்றம்தான். ஆனால் மண்ணுக்குள் புதையுண்டு கிடக்கும் ஒரு பெண்ணின் பிணத்தை விட மண்ணிலே நடமாடும் ஒரு பெண் நிர்வாணமாகியிருப்பதென்பது நான் செய்த குற்றத்தைவிடக் கொடுமை என்றே எனக்குத் தோன்றிற்று. ஆகவேதான் அந்தக் குற்றத்தையும் மனமொப்பிச் செய்துவிட்டேன்.

சவப்பெட்டி செய்யும் பட்டறை ஒன்றின் தெருத் தாழ்வாரத்தில் தூங்கிக் கொண்டிருந்த அவளை எழுப்பி அந்தப் புடவையைக் கட்டிக் கொண்டு எங்காவது போய்விடு என்று எச்சரிக்கை செய்தேன்.

''சரி'' என்று தலையாட்டிய அந்த தரித்திரம் பிடித்தவள் மறுநாள் விடித்த பிறகும் கோடி சேலை உடுத்திய பெருமையோடு அங்கேயே நடமாடிக் கொண்டிருந்து விட்டாள். புதைகுழியொன்று கிளறிக் கிடக்கும் பரபரப்பான விசயம் காலை விடிந்ததுமே அங்குள்ளோர் வாயிலடிபட ஆரம்பித்து விட்டது. அவள் நடமாட்டமும் சேர்ந்து வெகு சீக்கிரத்திலேயே ரகசியத்தை அம்பலமாக்கி விட்டது.

அவளிடமாவது உண்மையைச் சொல்லியிருக்கலாம். ஒருவேளை பிணத்திற்குக் கட்டிய சேலை எனக்கு வேண்டாம் என்று அவள் மறுத்து விட்டால் என்ன செய்வது என்ற பயம் தான் என்னை வாயடைக்கச் செய்துவிட்டது.

இதுதான் நடந்தது. இதை நீ மட்டும் நம்பினால் போதும்.

உன் அன்புள்ள நண்பன்,
சேகர்.

படித்து முடித்த பிறகும் அந்தக் கடிதத்தைக் கிழித்துப்போட எனக்கு மனமில்லை. சட்டப்படி சேகர் குற்றம் புரிந்தவனாகவே இருக்கட்டும். என்றாலும் அவன் என் நண்பன் என்று எண்ணிக் கொள்வதில் என் மனம் இப்போது மகிழ்ச்சியடையத்தான் செய்கிறது! ○

— இக்கதை ஆசிரியர் அமரர் வேந்தன் அவர்கள் தபால் - தந்தி இலாகாவின் ஊழியர். தொழிற்சங்கவாதி. இவர் எழுதிய கதைகள் இரு தொகுதிகளாக வெளிவந்துள்ளது.


முன்பணம் கட்டக் கூடிய முகவர்கள் தேவை

ஆசைக்கிளி
(பல்சுவை மாத இதழ்)
நிர்வாகி,
235, கோவிந்தப்பநாயக்கன் தெரு
சென்னை-600 001.



டாக்சி

முற்றிலும் ஆப்செட் முறையில் அச்சிடப்பட்டு தமிழகம் முழுவதும் விற்பனையாகும் எமது 'டாக்சி'யில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

விளம்பரக் கட்டணங்கள்
முழுபக்கம் (உள்ளே) ரூ.1000/-
அரை பக்கம் (உள்ளே) ரூ.500/-
உள் பக்க அட்டை ரூ.1500/-
பின் பக்க அட்டை ரூ.2000/-
(டிசைன் செலவு உட்பட)
(ஏஜெண்ட்களுக்கு கட்டணத்தில் 25/- கழிவு உண்டு)

விளம்பரம் செய்ய விரும்புவோர் 'டாக்சி' பெயரில் D.D. எடுத்து அனுப்பவும்.

'நிர்வாகி'
டாக்சி
326, ஆற்காடு சாலை,
சென்னை-600 024.


# நக்கீரன் மீது அடக்குமுறை நியாயம்தானா?

தவறு செய்பவர்களை கைது செய்யக்கூடாது என்றோ, கைது செய்வது முறைகேடான செயல், அநியாயமானது என்றோ, சொல்ல நாம் தயாரில்லை.



பத்திரிகைகள் நடத்துவதற்கு மத்திய அரசின் அனுமதியுடன் சென்னை பெருநகர தலைமை நீதிபதியின் முன் அலுவலக விலாசம், வெளியிடுபவர் விலாசம் ஆகியவை முறையாக பதிவு செய்யப்படுகிறது. பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் முகவரிகள் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகிறது.

நக்கீரன் அரசியல் வார இதழில் வெளிவந்த ஜெயலலிதாவின் வாட்டர் கேட் ஊழல் என்ற தலைப்பில் டெலிபோன்கள் ஒட்டுக் கேட்கப்பட்டதன் செய்தியினை தொடர்ந்து நிர்வாக ஆசிரியர் ஆர்.ஆர்.கோபால் ஆசிரியர் துரை, நிருபர் காமராஜ் ஆகியோரை(ர்) மிரட்டப்படுகின்ற பாணியில் கைது செய்யப்பட்டார்கள்.

அரசின் நல்ல செயல்களை பாராட்டுகின்ற பத்திரிகையாளர்கள் நடக்கின்ற தவறுகளை சுட்டிக் காட்டும் போது ஆட்சியாளர்கள் திருத்திக் கொள்ள வேண்டுமே தவிர மிரட்டுகின்ற நோக்கில் விடுமுறை நாட்களில் கைது செய்து சிறையில் அடைத்தது முறையான செயலல்ல. பத்திரிகையாளர்கள் ரௌடிகளோ, தலைமறைவாக செல்லும் குற்றவாளிகளோ அல்ல.

அப்படி விடுமுறை நாட்களில் கைது செய்தால் உடனே ஜாமீனில் வெளிவர ஏற்பாடு செய்வது அரசின் கடமை.

எந்த ஆட்சியாளரும் அடக்குமுறை எண்ணத்தில் பொதுமக்களையோ, பத்திரிகையாளர்களையோ மிரட்டுகின்ற நோக்கத்துடன் கைது செய்து வெற்றி கண்டதாக சரித்திரம் இல்லை என்பதை இந்த அரசு உணர வேண்டும்.

எனவே முறைகேடாக, நக்கீரன் ஆசிரியர்கள், நிருபர் ஆகியோரை கைது செய்ததை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

—— ஆசிரியர் குழு

# ஸ்ரீமத் பாகவதம்



பல வாசகர்கள் விருப்பத்திற்கு இணங்க பக்திக் கதைகளை தொடர்ந்து வெளியிடுகிறோம். இதனைப் படித்து தெய்வ பலன் பெறுவோர் பெற்று மகிழவும், புராணக் கதைகளை அறிய முயல்வோர் அறியவும் இந்தத் தொடர் தொடரும்.

— ஆசிரியர்.

## 1. அசாமிளன் கதை

பரீட்சித்து மகாராஜன் சுகமுனிவரைப் பார்த்து, ''பிரபுவே உலகத்தில் மக்கள் புண்ணியத்தைச் செய்வதனால் சுவர்க்கத்தையும், பாவத்தைச் செய்வதனால் நரகத்தையும் அடைவதாகச் சொன்னீர்கள். பாவத்தைச் செய்தவனுக்கு அதிலிருந்து தப்ப வழியே கிடையாதா? ஏதேனும் இருப்பின் எனக்குச் சொல்ல வேண்டும்'' என்றான்.

இவ்விதமாக அரசன் கேட்டபொழுது சுகமுனிவர், ''அரசனே, பிராயச்சித்தங்கள் பல ஆங்காங்குச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் எல்லாவற்றிலும் மிகச் சுலபமானதொரு பிராயச்சித்தம் உளது. பகவானின் பல பெயர்களில் ஏதேனும் ஒன்றைச் சொல்லி, அன்றலர்ந்த பூக்களைக் கொண்டு, பகவானின் திவ்விய மங்கள மூர்த்தியை அருச்சித்து, பகவானுடைய தாமரை யடிகளை வணங்கி அவரது திருப்பெயரைக் கூறித் துதித்தால், எப்படிப்பட்ட தீவினை செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் பலன்கள் நசித்துப் போகும்'' என்று கூறி, அதற்குச் சான்றாக பின்வருங் கதையைக் கூறினார்:-

கான்யகுப்சம் என்னும் நாட்டில் அசாமிளன் என்ற அந்தணன் வசித்து வந்தான். அவன் கல்வி கேள்விகளிற் சிறந்தவனாய், அந்தணர் செய்ய வேண்டியவற்றை முறைப்படி செய்துகொண்டு வசித்து வந்தான். ஒரு பொழுது தந்தையார் உத்தரவுப்படி, அவருக்கு வேண்டிய சுள்ளி, புல் முதலியவற்றைக் கொணர்தற்பொருட்டு அவன் காட்டிற்குச் சென்றான். அக் காட்டில் கட்குடித்ததனால் சிவந்த கண்களையுடையவளும், அழகிய அங்கங்களை யுடையவளும், இன்னொருவனுடைய காமவேட்கையை தணிப்பவளுமான ஒருத்தியைக் கண்டான். அதனால் இவனுக்கு மன்மத விகாரம் உண்டாக, அங்கேயே அவளுடனேயே தன் முன்னாள் வாழ்க்கையை அறவே மறந்து வசிக்கத் தொடங்கினான். அவளிடம் இவனுக்குப் பல புதல்வர்கள் தோன்றினர். அவர்களுள் கடைசிக் குமாரனான நாராயணன் என்பானிடம் அவன் மிகவும் விருப்பத்துடன், தனக்குக் கிடைக்கும் உணவு முதலியவற்றில் ஒரு பகுதியைக் கொடுத்து அவனிடம் பேரன்பு பூண்டு வாழ்ந்தான். இங்ஙனம் இருக்குங்கால் இவனுடைய ஆயுள் தீர்ந்து போய் விட்டது. அப்பொழுது இவனுயிரைக் கொண்டு போக இயம தூதர்கள் பாசக்கயிற்றுடன் வந்தனர். பழம் பிறப்பிற் செய்த நல்வினையின் பயனாய் இவன் கண்களுக்கு அவர்கள் தோன்றினர். அவர்களைக் கண்டு அஞ்சிய இப் பாதகன் குழறும் நாக்குடன், தன் அன்புக்குகந்த புதல்வனான நாராயணனைப் பெயரிட்டழைத்தான். அதற்காகவே காத்திருந்தவர்கள் போல் விஷ்ணு தூதர்கள் நால்வர் விரைந்தோடி வந்து இயம கிங்கரர்களைத் தடுத்து, 'இவனை விடுமின்' என்றனர்.

இவ்வுரையைக் கேட்டலும், இயம கிங்கரர்கள் அந்தச் சீவனின் துர்நடத்தைகளை விளக்கியுரைத்து, ''இப் பாவச் செயல்களின் பயனை நுகர்வித்தற் பொருட்டு இவனை நரகத்திற் கொண்டு சேர்க்கும்படி எங்கள் அரசன் ஆணையிட்டனன்'' என்றனர். அதைக் கேட்ட விஷ்ணு தூதர்கள் இயம தூதர்களை எள்ளி நகைத்து, ''உங்கள் அரசனைத் தர்மராஜன் என்கிறீர்கள். பாவம் செய்யும் மனிதன் அதற்குண்டான பிராயச்சித்தத்தைச் செய்துவிட்டால், அவனைத் தண்டிப்பது அடாது என்று அவன் அறியவில்லையே. இவன் பாவங்களையெல்லாம் பொசுக்கவல்ல பகவானுடைய பெயரை மொழிந்தான். ஆதலின் தீவினை இவனை விட்டு அகன்றது. இவனைத் தண்டிக்க இயலாது. இவன் தன் பிள்ளையையே குழறும் நாக்குடன் கூப்பிட்டான் என்றும், திருமாலை அழைக்கவில்லையே என்றும் நீங்கள் மறுப்புரைத்தல் கூடும். நெருப்புச் சுடும் என்று அறியாதவன், நெருப்பைத் தொட்டால் சுடுவதில்லையா? அங்ஙனமே இவன் பகவானது பெயரின் பெருமையை அறிந்தோ அறியாமலோ சொன்னான். அதுவே எல்லாத் தீவினைகளையும் சுட்டெரித்து விட்டது. சாகும் பொழுது அதைச் சொன்னதால், மறுபடியும் இவனைத் தீவினைகள் தொடர முடியா. ஆதலில் இவனை விட்டுச் செல்லுங்கள். உங்களுக்கு ஐயம் இருப்பின் உங்கள் அரசனையே கேளுங்கள்'' என்றனர். இயம கிங்கரர்களும் வேறொன்றும் செய்ய மாட்டாதவர்களாய் அவ்விடம் விட்டகன்றனர்.

இவற்றை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த அசாமிளனுக்குத் தன் முன்னாள் நினைவு வர, அப்பொழுதே பகவானைப் பக்தி செய்ய உறுதி பூண்டான். இதை அறிந்த விஷ்ணு தூதர்களும் வைகுந்தம் சென்றனர். பிழைத்தெழுந்த அசாமிளன் கங்கைக் கரைக்குச் சென்று, அப்புனித நீரில் நீராடி, தன் பாவங்களைக் களைவதற்காக, எப்பொழுதும் பகவானிடம் பக்தி செலுத்தி, முடிவில் தனக்குரிய தெய்வ உருவை அடைந்தான்.

இதிலிருந்து நாம், 'பகவானின் பெயர் எல்லாப் பாவங்களையும் போக்க வல்லது. அதை நாம் மனத்தில் இருத்திக் கடவுளை வழிபட்டும் அப்படி வழிபடுவோரைப் பணிந்தும், அவர்களைப் பற்றிய கதைகளைக் கேட்டும் வந்தால் நற்கதியடைய வழி உண்டு' என்னும் உண்மையை உணரலாம்.

## 2. தட்சனின் மரபு

சுகர் பிறகு பரீட்சித்துக்குப் பலவகை வரலாறுகளைச் சொல்லலானார்:-

சுவாயம்புவ மனுவின் மரபில் பிறந்த பிராசீன பர்ஹிஸ் என்பானுக்குப் பிரசேதஸர்கள் என்ற பதின்மனார் புதல்வர்களாய்ப் பிறந்தனர். அவர்கள் தவம் செய்து திரும்பியபொழுது, உலகமெங்கும் மரங்களாய் அடர்ந்திருத்தலை அறிந்து கோபம் கொண்டு, அவற்றைப் பொசுக்கத் தொடங்கினர். அதைத் தடுத்து அவர்களைச் சமாதானப்படுத்தி, தெய்வப் பெண் ஒருத்தியை அவர்களுக்கு மனைவியாகக் கொடுத்துச் சந்திரன் சென்றான். அவர்கள் அவளிடம் தட்சன் என்பவனைப் புதல்வனாக அடைந்தனர்.

தட்சன் தகப்பனாரின் கட்டளைப்படியே மக்களை மனத்தினால் படைத்தான். ஆனால் அந்தப் படைப்பு விருத்தியடையவில்லை. அதைக் கண்டு வருத்தங்கொண்டு அவன் நாராயணனைக் குறித்துத் தவம் செய்தான். அவர் அந்தத் தவத்தினால் மகிழ்ச்சி அடைந்தவராய் நேரில் வந்து, பஞ்சஜனனின் பெண்ணான அசிக்கினி என்பவளை மணந்து, ஆண் பெண் சேர்க்கையால் மக்களை உண்டாக்கும்படி சொல்லி மறைந்தார்.

அங்ஙனமே தட்சனும் அசிக்கினியை மணந்து, அவளிடத்தில் 10,000 புத்திரர்களை உண்டாக்கி, மரபைத் தொடர்ந்து உண்டாக்கும்படி உத்தரவிட்டான். அவர்களும் அதற்கு இசைந்து மக்களை உண்டாக்க வேண்டிய திறனை அடைவதற்காகத் தவம் செய்யச் சென்றனர். அங்கு நாரதர் தோன்றி, ''நீங்கள் ஒன்றும் அறியாதவர்களாயிருந்து, மக்களை ஏன் படைக்க முயல்கின்றீர்கள்? இது உங்களை எப்பொழுதும் வினையிலேயே இருக்கச் செய்யும். இவ்வழியைத் தவிர்த்து, மோட்சத்தையடைய வழியைத் தேடுங்கள்'' என்று மறைபொருளாய் உரைத்துச் சென்றார். அவர்கள் இவ்வார்த்தைகளைக் கேட்டதும் தங்கள் அறிவு வன்மையால், தவமே மேலானது என்று உணர்ந்து, மக்களை உண்டாக்குவதைத் தவிர்த்தனர்.

இதை அறிந்த தட்சன் மிகவும் வருத்தமடைந்து செய்வது யாதென்று தோன்றானாய் இருக்கும்பொழுது, பிரமதேவர் தோன்றி அவனைச் சமாதானப்படுத்தி, மறுபடியும் புத்திரர்களை உண்டாக்கச் சொன்னார். அவனும் அங்ஙனமே மறுபடியும் 1000 புதல்வர்களைப் பெற்றான். அவர்களையும் புத்திரர்களை உண்டாக்கும்படி கூறித் தவம் செய்து வரம்பெற்று வரும்படி ஏவினான். அவர்களும் தந்தையின் கட்டளைப்படியே தவம் செய்து கொண்டிருக்குங்கால், நாரதர் மறுபடியும் அங்குத் தோன்றி அவர்களுக்கும் மோட்ச மார்க்கத்தை உபதேசித்துப் போனார். அவர்களும் மோட்ச மார்க்கத்திலேயே நிலையாய் நின்று விட்டனர்.

இவ்வாறு தன்னுடைய புத்திரர்களை மோட்ச வழிக்குத் திருப்பியதற்காகத் தட்சன் வெகுண்டு, ''மனிதர்கள் சில நாட்களாவது இல்லற சுகத்தை நுகர்ந்து துறவறத்தை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறன்றிச் சிறுவர்களைத் துறவறம் புகச் செய்தாயன்றோ? நிலையாய் நில்லாமல் சுற்றிக்கொண்டே இருப்பாயாக'' என்று நாரதருக்குச் சாபமிட்டான். நாரதரும் அந்தச் சாபத்தைச் சாபமாகக் கருதாமல் தமக்கு நல்லதாகவே எடுத்துக்கொண்டு, ''அங்ஙனமே ஆகுக'' என்று ஒப்புக் கொண்டார்.

மறுபடியும் பிரமதேவரால் சமாதானப்படுத்தப்பட்டு, அசிக்கினியிடம் 60 பெண்களை உண்டாக்கி, அவர்களுள் தருமருக்கு 10 பெண்களையும், சந்திரனுக்கு 27 பெண்களையும், காசிபருக்கு 13 பெண்களையும், பூதன், அங்கிரஸ், கிருதாச்வன் இவர்களுக்கு முறையே இரண்டிரண்டு பெண்களையும் கொடுத்து எஞ்சிய 4 பெண்களையும் மீண்டும் காசிபருக்கே கொடுத்தான். இப் பெண்களெல்லாம் தங்கள் தங்கள் கணவன்மார்களிடம் அன்பு பூண்டொழுகி மரபைப் பெருக்கினர். ஆனால் சந்திரன் மாத்திரம் தன் 27 மனைவியரில் ரோகிணியிடம் மட்டும் அதிக அன்பு காட்டியதன் காரணமாக, 'புத்திரன் இல்லாமலே இருக்கக் கடவாய்' என்று தன் மாமனாரால் சபிக்கப்பட்டான். ஆகையால் அந்த 27 பெண்களுக்கு மட்டும் சந்ததிகள் இல்லை.

காசிபரின் பத்தினிகளுள் முக்கியமானவர் திதி, அதிதி, தனு முதலியோர். அதிதியின் வம்சத்தில் திருமால் அவதரித்தார். அந்த வம்சத்தில் த்வஷ்டா, ஸவிதா, தாதா, விதாதா, வருணன், மித்திரன் முதலியவர் பிறந்தனர். த்வஷ்டா என்பவன் தைத்தியனுடைய தங்கையான ரோசனையை மணந்து, அவளிடம் விசுவரூபனைப் பெற்றான். விசுவரூபனும் எல்லாவிதத்திலும் மேம்பட்டவனாயிருந்தான்.

ஒரு சமயம் இந்திரன் சபையில் வீற்றிருக்கும்பொழுது, அச்சபைக்குத் தேவகுருவான பிருகஸ்பதி பகவான் வந்தார். அவர் வந்ததை அறிந்தும், தான் தேவர்களுக்கெல்லாம் அதிபதி என்ற கர்வத்தினால் இந்திரன் அவருக்குச் செய்ய வேண்டிய மரியாதையைச் செய்யவில்லை. பிருகஸ்பதி பகவானும் வெறுப்புடன் அவ்விடம் விட்டு அகன்றார்.

அவர் அகன்றதும், தான் செய்தது தவறு என்று உணர்ந்த இந்திரன், அவரைச் சமாதானப்படுத்தி அழைத்து வர அவரது ஆசிரமத்துக்குச் சென்றான். ஆனால் அவர் எங்கும் நில்லாமல் மறைந்து விட்டதனால் அவரைக் காண முடியாமல் அவன் தவித்தான். அசுரர்கள் தேவர்களுடைய குரு அவர்களிடம் இல்லை என்று அறிந்து போருக்குக் கிளம்பினர். அவர்கள் வந்ததும், தங்களைக் காப்பாற்றச் சக்தியுடையவர் எவரையும் காணாமல் தேவர்கள் பிரம தேவனிடம் வந்து முறையிட்டனர். பிரமதேவன், 'த்வஷ்டாவின் புதல்வனான விசுவரூபனைக் குருவாகக் கொள்ளுங்கள். அவன் உங்களை அசுரர்களிடமிருந்து காப்பான்'' என்று சொன்னதைக் கேட்ட இந்திரன் முதலியோர் விசுவரூபனிடம் சென்றனர்.

தொடரும்

டாக்சி 15

# சாதிகள் பிறந்த கதை

3

தா.பாண்டியன் எம்.பி

1883 ஆம் ஆண்டு நியூயார்க் டெய்லி டிரிபியூன் ஏட்டிற்கு ஜூன் மாதம் எழுதிய கட்டுரைச் செய்தியில் இந்திய மக்களைப் பற்றி காரல் மார்க்ஸ் குறிப்பிட்டுள்ளது ஆழ்ந்து படிக்க வேண்டியதாகும்.

1981-லும் கூட, மார்க்ஸ், வெகு தொலைவிற்கு அப்பாலிருந்து கொண்டே, அறிவுக் கண் கொண்டு பார்க்க முடிந்ததை, நம்மைச் சுற்றிலும் இன்றும் அசையாது இருக்கும் ஒரு பகுதி கிராமங்களில் காணலாம். (பல கிராமங்களில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிற போதிலும் மாறாதிருக்கும் கிராமங்களும் உண்டு) மார்க்ஸ் எழுதியதைப் படிப்போம்:-

''இந்துஸ்தானத்தின் உள்நாட்டுப் போர்களும், புரட்சிகளும், வென்றடக்கும் ஆக்கிரமிப்புகளும், பஞ்சங்களும், அடுத்தடுத்து நிகழ்ந்தன என்பது, அவை சிக்கலானவை என்பதோடு விரைவாக நிகழ்ந்த பெரிய அழிவுகளை ஏற்படுத்தின என்பதும் உண்மையே.''

ஆனால் அவையெல்லாம் சமுதாயத்தின் மேற்பரப்பையே பாதித்தன. இங்கிலாந்தோ இந்திய சமுதாயத்தின் முழு அமைப்பையும் சின்னாபின்னமாக்கியே விட்டது. அதே சமயத்தில் புத்தமைப்புக்கான அறிகுறி ஏதும் இதுவரையில் தோன்றவில்லை. இவ்வாறு புதிய உலகத்தைப் பெறாது பழைய உலகத்தை இழந்து நிற்கும் நிலையானது இந்தியரது இன்றைய துயரத்திற்கு ஓர் அலாதியான சோர்வைக் கூட்டுகிறது '' என்று வர்ணிக்கும் காரல்மார்க்ஸ் கிராமிய மக்களைப் பற்றி குறிப்பிடுகிற போது கூறுகிறார்:

''இந்த அமைதியான கிராமச்சமூகங்கள் சாதுக்களாகத் தோன்றிய போதிலும், கீழ்க்காணும் கொடுங்கோன்மைகளுக்கு அடிப்படையாகவிருந்தன என்பதை நாம் மறக்கமுடியாது. அந்தச் சமூகங்கள் மனித மூளையை சின்னஞ்சிறு கூட்டுக்குள் அடைத்து அதை மூட நம்பிக்கையின் சுலபமான கருவிகளாகவும், பரம்பரைச் சம்பிரதாய விதிகளின் அடிமையாகவும் ஆக்கியதையும், சகல வகைப்பட்ட சிறப்புக்களையும், சரித்திர பூர்வமான சக்திகளையும் மனித மூளை பெறமுடியாமல் செய்ததை மறக்கமுடியாது. சின்னஞ்சிறு நிலத்தில் குவிந்து கொண்டு, சாம்ராஜ்யங்கள் வீழ்ச்சி ஆவதையும் வருணிக்க முடியாத கொடுமைகள் நிகழ்வதையும், பெரிய நகரங்களில் மக்கள் படுகொலைகள் செய்யப்படுவதையும் சலனமில்லாமல் பார்த்துக் கொண்டிருந்த அந்தச் சமூகங்களின் காட்டுமிராண்டித்தனமான தன்னகங்காரத்தை நம்மால் மறக்க முடியாது. இயற்கையில் நிகழும் சம்பவங்கள் சம்பந்தமாக எவ்வளவு அக்கறை காட்டினார்களோ, அதே அளவு அக்கறையைத்தான் மேற்சொன்ன சம்பவங்கள்பாலும் காட்டினார்கள். தவிர எந்த ஆக்கிரமிப்பாளனுடைய கவனமாவது இதன் மீது விழுந்துவிட்டால் இந்த சமூகங்கள் எதிர்க் கவலையில்லாமல் ஆக்கிரமிப்பிற்கு இரையாயின. இந்தத் தேக்கம் நிறைந்த - அசைவற்ற - அகௌரவ வாழ்க்கை நேர்மாறான விளைவுகளையும் சிருஷ்டித்தது. கட்டுக்கடங்காத நாசகாரசக்திகள் நோக்கம் இல்லாமல் அழிக்கும் சக்திகள் குமுறி எழுந்தன.

இந்துஸ்தானத்தில் கொலையே ஒரு சடங்காயிற்று. இதை நாம் மறக்கக் கூடாது.

ரோமாபுரியில் ஸ்பார்ட்டகஸ் என்ற வீரன் தலைமையில் அடிமைகள் திரண்டு, கிளர்ந்து எழுந்து போராடிய கதையை ஹோவார்டு பாஸ்டு நவீனமாக எழுதியுள்ளார் படியுங்கள்.

இந்தச் சிறு சமூகங்கள் சாதி வேறுபாடுகளாலும், அடிமை முறையாலும் களங்கமடைந்தருந்தன. தானாக மாறி வளர்ந்து கொண்டிருந்த சமூக நிலையை, ஒருபோதும் மாறாத இயற்கை விதியாகச் செய்தன. இந்த விதமாக இயற்கையையே மனிதன் கும்பிட்டு வணங்கும் மிருகத்தனமான நிலையைச் சிருஷ்டித்தது. இயற்கையின் எஜமானனாகிய மனிதன், குரங்காகிய அனுமன் முன்பும், பசுமாட்டின் முன்பும் மண்டியிட்டு வணங்கியதில் இச்சிறுமை பளிச்சிட்டது. இதையும் நாம் மறக்கக் கூடாது.

(இந்தியாவைப் பற்றி மார்க்ஸ்) இது அமெரிக்கப் பத்திரிகைக்கு 1883-ல் மார்க்சால் எழுதப்பட்டது.

இதில், படையெடுப்புகள் மேல் மட்டத்தையே பாதித்ததையும். அடித்தட்டு மக்களை அசைக்காது விட்டதையும் மார்க்ஸ் குறிப்பிடுகிறார். தேக்கம் நிறைந்த கிராமிய கூட்டு வாழ்க்கை முறை வளர்ச்சிக்கே முட்டுக்கட்டையாக இருந்ததையும், சாதிகள், அடிமை மு... ர் இருந்ததையும் குறிப்பிடுகிறார்.

இன்றும், இவை நமக்குப் பிரச்சினைகளாக உள்ளன. கொத்தடிமைகளை விடுவிக்க, சட்டங்கள், திட்டங்கள் போட்ட பிறகும், அத்தகைய நலிவுற்ற பகுதி நம் நாட்டில் கட்டுண்டு கிடப்பது உண்மை.

அடிமைகளை விடுவிக்கும் மதமாகத்தான் கிறிஸ்துவ மதம் ரோமாபுரியில் அடியெடுத்து வைத்தது. பின்னர் அதுவே அடிமை முறையை நியாயப்படுத்திய கதையும் நடந்தது. புனித சிலுவைப் போரின் போது ஷெப்ஹார்டு என்ற பாதிரி பனிரண்டாயிரம் குழந்தைகளை எருசலேமை மீட்க அழைத்துக் கொண்டு போவதாகச் சொல்லி அழைத்துக் கொண்டு போய், இஸ்தான்பூலில் அடிமைகளாக விற்றுவிட்டு ஓடிவிட்ட வரலாற்று வரிகளை மறக்க முடியாது.

இந்திய அடிமை முறை கிரேக்க, ரோமாபுரி அடிமை முறைகளைப் போலவோ, இங்கிலாந்து, பிரான்சு முறைகளைப் போன்றோ, நொறுங்கிப் போகாமல், வேறு ஒரு பெயரைப் பெற்று நிரந்தரமாக நிலைத்து விட்டது.

இந்தக் கட்டுக் கோப்பை, மாறி மாறி வந்த நிலப் பிரபுத்துவ ஆட்சிகள் கட்டிக் காத்தே வந்தன. அது அவர்களது நலன்களுக்குத் தேவைப்பட்டது.

புத்தமதம் மட்டுமே இதனோடு மோதிப்பார்த்து, முயன்று தோல்வி கண்டு துவண்டு விட்டது.

இஸ்லாமியப் படைப்பு, ஒரு தனிப்பிரிவினரை இந்தியாவில் உண்டு பண்ணியதோடு, இந்தியமக்கள் வாழ்க்கையில் ஊடுருவவில்லை.

வெள்ளையர்கள், இருந்த சமூக அமைப்பைக் கட்டிக் காக்கப் பெரிதும் உதவினர். பிளவுகள் நிலைத்திருப்பதன் பலனை, அவசியத்தை உணர்ந்திருந்தனர். அவர்கள் நிலப்பிரபுத்துவ முறைக்கு சட்டப்பாதுகாப்புக் கொடுத்து இறுக இழுக்க உதவினர்.

இதனை எதிர்த்து வந்த தேசிய இயக்கம், பெரும்பாலும் உயர் சாதியினர், வசதிபடைத்தோர் மத்தியிலிருந்து வந்தோரால் தலைமை தாங்கப்பட்டது. இதுதான் சாதியப்பிடிப்புக்கள் நீடிக்கக்காரணம். சாதி, சமூக விஷயங்களைத் தொடாமல் இந்திய மக்களை ஒன்று படுத்தவே அவர்களும் முயன்றனர். எனவே, தேசிய இயக்கமும் சாதிப் பிளவுகளை அசைக்கவில்லை.

புதிய தொழில் வளர்ச்சிகள் ஏற்பட்டன என்பது உண்மை.

சொத்துடையோராகவும், கற்றுத் தேர்ந்தவராகவும் மேல்சாதியினரே இருந்ததால், தொழில் துறையும் மேல் சாதியினரின் செல்வாக்கின் கீழ் சென்றது. இவர்களும், தாழ்த்தப்பட்டோரை தொழில்களில் (தொடக்கத்தில்) சேர்த்துக் கொள்ளவில்லை. தங்கள் சாதியினர்க்கு தனி இடம் தந்தனர்.

எனவே, வந்த தொழில் துறையும் கிராமியத் தேக்கத்தைத் தகர்க்கவில்லை - இதுகாறும்.

இன்னும் போதுமான அளவிற்குத் தொழில்கள் தோன்றி வளரா

அவர்களது வளர்ந்து வந்த புதிய தொழிற்சாலைகளில் உற்பத்தி வேலையில் ஈடுபட, சுதந்திரமான கூலிகள் அவர்களுக்குத் தேவைப்பட்டனர். எனவே நிலப்பிரபுக்களிடம் கட்டுண்டு கிடந்த கொத்தடிமைகளை விடுவித்தால் தான், தங்களது தொழிற்சாலைகளில் வேலை செய்ய ஆட்கள் (இல்லை) கூலிகள் கிடைப்பார்கள் என்பதால் போராடினார்கள்.

மல், விவசாய முறை வாழ்க்கை நீடிப்பதும் இன்னொரு முக்கியமான காரணமாகும்.

ஒவ்வொரு பகுதியிலும் வாழ்ந்த ஒரு இனம், அல்லது குழுவிற்கு ஒரு குறிப்பிட்ட பெயர் இருந்தது. அப்பெயரே அதன் சாதிப் பெயர் என்றாயிற்று.

சாதிகள் தொழில் அடிப்படை



யில் தோன்றின என்பதும், பிறப்பால் தோன்றின என்பதும், முழுக்கப் பொருந்துவதாகத் தோன்றவில்லை.

பிராமணர்கள் வேதம் ஓத, வைசியர்கள் வியாபாரம் செய்ய, க்ஷத்திரியர்கள் போராட, நாடு காக்க, சூத்திரர் இதர தொழில்கள் அனைத்தும் செய்ய வேண்டியவர்கள் என்று கூறப்படும் பொதுப்படையான வேலைப் பிரிவு, ஏற்கனவே இருந்து வந்த சாதி அமைப்புக்கள் பெற்றிருந்த சமூக அந்தஸ்தைப் பொறுத்துக் கிடைத்தத் தொழில்களாக வாழ்க்கை முறையாக இருந்தன.

சாதிகள் தோன்றி, நெடு நாட்களுக்குப் பிறகு, பிராமணர்கள் சமூகத் தலைமையைக் கைப்பற்றிக் கொண்ட பிறகு இத்தகைய வேலைப் பிரிவினை செய்யப்பட்டதாக எழுதி வைத்துக் கொண்டனர். இவ்வித வேலைப் பிரிவினையை வைத்து சாதி அமைப்பு தோன்றியிருக்க முடியாது என்பதற்கு, இத்தொழில்கள், இந்த நான்கு வர்ணத்தாராலும், மாறி மாறியும் செய்யப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் வருவதற்கு முன்னர் பிராமணல்லாதார் தான் மதத் தலைவர்களாகவும் இருந்துள்ளனர். பின்னர் தான் இத்தலைமை பெருமளவில் மாறியுள்ளது. இன்றைக்கும் மதத்தலைமை மாறாமல், பிராமணரல்லாதோரிடமும் நிறைய இருப்பதைக் காண முடியும்.

வைசியர்கள் மட்டுமே வாணிபம் செய்தனர் எனக் கூறுவதற்கில்லை. க்ஷத்திரியர்கள் மட்டும் தான் நாடாள்வோராய், போர் வீரராய் இருந்தனர் என்பதும் சரியல்ல.

இந்தியா முழுவதிலும் பூர்வீகக் குடிகளாக இருந்தோர் திராவிடர்கள் தான். இவர்களின் ஒரு பிரிவினரை தாஸ்யூக்கள் என்று ஆரியர் அழைத்தனர். அசுரர்கள், அரக்கர்கள் என்று இவர்களால் வருணிக்கப்பட்டோர், இந்தியாவின் பூர்வீகக் குடிமக்களையும், அவர்களது குறுநில மன்னர்களையும் தான்.

ஆனால், அவர்கள் தோற்கடிக்கப்பட்ட பிறகு, அவர்களது சொத்துக்களையும், ஆயுதங்களையும் பறிமுதல் செய்து, சமூகத்தில் கடைசி இடத்திலும், அரசியலில் உரிமை ஏதும் இல்லாதோராகவும், கல்வியறிவு பெறத் தடை செய்யப்பட்டோராகவும், ஊருக்கு வெளியில் ஒதுக்குப் புறங்களில் குடியிருக்க வேண்டியோராகவும் பூர்வீக மக்கள் தள்ளப்பட்டனர்.

இவர்கள் எதிர்த்துப் போராடியதால் தான் இவர்களை முழு நிராயுதபாணிகளாக்கும் நோக்குடன் சொத்து இல்லாத, ஆயுதம் வைத்துக் கொள்ள உரிமையற்ற, ஊருக்கு நடமாடவும் உரிமையில்லாத தீண்டத்தகாதோராக ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும்.

*இவர்கள் நாகரிகம் பெறாமல் காட்டுமிராண்டிகளாக திறமையற்று இருந்தனர் என்பது உண்மையல்ல.*

> அடிமைகளை விடுவிப்பது என்ற கோரிக்கைக்காகவே வட - தென் அமெரிக்காக்களுக்கிடையில் போர் நடந்ததையும் வரலாற்றில் காண்கிறோம். இதனால் பாதிக்கப்பட்டோரின் பிரதிநிதி தான் லிங்கனைச் சுட்டுக் கொன்றான் என்பதையும் வரலாறு காட்டுகிறது.

*இவர்கள் போர்களில் வெல்ல முடியாமல் தோற்றுப் போனதுதான். இவர்களது இழிவுக்கான தொடக்கம்.*

*இவர்களைக் கைது செய்து கட்டி இழுத்துச் சென்று, தங்களது வீட்டு வேலைகளைச் செய்வதற்கான அடிமைகளாக, கிரேக்க, ரோமாபுரி முறையில் இங்கு வந்தோர் செய்யவில்லை.*

*சகல உரிமைகளையும் இழந்து, பிறரைச் சார்ந்து வாழவேண்டிய நிலையில் இவர்கள் நிறுத்தப்பட்டனர். தனக்கென நிலம் இல்லாது, பிறர் நிலத்தில் பயிரிட்டு கூலி பெற்று வாழவேண்டிய நிலை, இவர்களை எப்பொழுதும் பிறரைச் சார்ந்தே இருக்க வைத்தது.*

*சொத்துடமை, கல்வி உரிமை, குடியுரிமை இழந்ததால், காலப் போக்கில் இவர்கள் நலிந்து நலிந்து கடைநிலைக்குப் போயினர்.*

*கிரேக்க ரோமாபுரிக்காரர்கள் மாதிரி, இந்த அடிமைகளுக்கு சோறு போடுகிற வேலையை இவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த அடிமைகளை உற்பத்தியில்லாத, எடுபிடி வேலைகளில் மட்டுமே பயன்படுத்தவில்லை. மாறாக, இந்திய அடிமைகள், உற்பத்தி வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். குடும்பம் நடத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டதால், அடிமைகளின் சந்ததி தொடர்பு முறியாமல் தொடர்ந்து நீடித்தது. பிறருக்காக உற்பத்தி வேலை செய்தாலும், சொந்தப் பொருளாதார அஸ்திவாரம் இல்லாது அடுத்தவரைச் சார்ந்தே வாழ்ந்ததால், சுயஉரிமை உணர்வும் குன்றியது.*

*இந்திய அடிமைகள் ஊருக்கு ஒதுக்குப் புறத்தில் எப்படியோ வாழ்ந்து கொண்டு பிறரது நிலங்களில் வாழ்வதற்காகக் கூலி வேலை செய்து, குடும்பத்தையும் நடத்திக் கொண்டு காலத்தை ஓட்டியதால்,*

> *தஞ்சை சரஸ்வதி மகாலில் குற்றவாளிகளைத் தண்டிக்க தஞ்சைத் தரணியில் பயன்படுத்தப்பட்ட சில கருவிகளைப் பற்றிய தகவல் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதைப் பார்க்கும்போது கொடூரமான அடிமை முறை இருந்திருக்க வேண்டும் என்றே தெரிகிறது.*

*இவர்களைப் பராமரிக்கிற பொறுப்பு, அல்லது சுமை, கிரேக்க எஜமானர்கள் மீது விழுந்ததைப் போல, இந்திய எஜமானர்கள் மீது விழவில்லை.*

*சுயமாக உழைத்து, தன்னுயிரைக் காத்துக் கொண்டு, கூலியை மட்டும், பெற்றுக் கொண்டு சில இலவசக் கடமைகளையும் செய்து கொண்டு வாழக்கூடிய புதிய அடிமை முறை இந்தியாவில் அமைந்தது.*

*இத்தகைய அடிப்படையில் இந்திய அடிமை முறை அமைந்ததால் தான் அது இன்றைக்கும் உடையாமல், சில சிறு உருமாற்றங்களோடு நீடித்து வருகிறது.*

*இந்தியாவின் பூர்வீகக்குடி மக்களை, அவர்களது இருப்பிடத்திலேயே அடிமைகளாக ஆக்கி, அவ்வாறு இருப்பதே அது ஆண்டவனால் விதிக்கப்பட்ட கட்டளை என்பதை நம்ப வைக்க வேதங்களையும், சரித்திரங்களையும் கொண்டு வந்த இரண்டாவது கட்டத்தில்தான் மனுவும், அவரையொத்த எஜமான தத்துவவாதிகளும் புகுந்தனர்.*

*கரடுமுரடாக இருந்த அடிமை முறைக்கு சாத்திரப்பூச்சுப்பூசி,' சாதி, விதி, கர்மம் என்ற பட்டயங்களைப் போட்டு, இவை நிரந்தரமாக, தெய்வத்தின் பெயரால் இருக்க வைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்த கட்டத்தில் தான் ஆரியர்களின் கைவரிசை; இந்தியாவின் பெரும் பகுதியில் வெற்றியைப் பெற்றது.*

*இவர்கள் கைவரிசை, தத்துவம், மிரட்டல் வெற்றி பெறாத இடங்களும் நிறைய இருந்தன. இன்றும் இருக்கின்றன.*

*இந்தியாவிலுள்ள சாதிகளில் பிராமணர்களே தலைச்சாதியினர் என்பது உண்மையல்ல.*

*பிராமணன் வாயிலிருந்து பிறந்தான்.*

> கரடுமுரடாக இருந்த அடிமை முறைக்கு சாத்திரப்பூச்சுப்பூசி, சாதி, விதி, கர்மம் என்ற பட்டயங்களைப் போட்டு, இவை நிரந்தரமாக, தெய்வத்தின் பெயரால் இருக்க வைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்த கட்டத்தில் தான் ஆரியர்களின் கைவரிசை, இந்தியாவின் பெரும் பகுதியில் வெற்றியைப் பெற்றது.

*க்ஷத்திரியன் தோளிலிருந்து பிறந்தான். வைசியன் தொடையிலிருந்து பிறந்தான். சூத்திரன் பாதத்திலிருந்து பிறந்தான் என்ற கட்டுக் கதை காட்டுமிராண்டித்தனமான கதை எல்லா இடங்களிலும் வெற்றி பெறவில்லை.*

*பாரதியாரின் கட்டுரையிலே இமயமலைப் பகுதியில் பிராமணர்கள் முதல் சாதியாகக் கருதப்படுவது இல்லை என்பதையும், நெல்லையில் கம்பளத்து நாயக்கர்கள் பிராமணர்களை மதிப்பது இல்லை, திருமண நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள விடுவது இல்லை என்பதையும் சாதி விநோதங்கள் என்ற கட்டுரையில் குறிப்பிடுகிறார்.*

*உத்தரப் பிரதேசத்தில் அதிகமாகவுள்ள ஜாட் சாதியினர் பிராமணர்களை மிகவும் கீழான சாதியினராகக் கருதுவதுடன், அவ்வாறு தான் நடத்தியும் வருகின்றனர்.*

*ராஜஸ்தானில் உள்ள ராஜபுத்திரர்களும் பிராமணர்களை ஏவல் வேலை செய்வோராக மட்டுமே கருதி அவ்வாறே நடத்துகின்றனர். தேவர் சமூகத்தைச் சேர்ந்த சில பிரிவினர் பிராமணர்களைத் தங்களது திருமண விழாக்களில் பங்கெடுக்க விடுவது இல்லை. தங்களது கோயில்களுக்கு தங்கள் சாதிப் பூசாரிகளை மட்டுமே வைத்துள்ளனர்.*

*தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்த பூசாரி கூட இருக்கிறார். மருத்துவர் வகுப்பைச் சேர்ந்த பூசாரி இருக்கிறார். பிராமண குரு அனுமதிக்கப்படவில்லை.*

*இவ்வித விதிவிலக்குகள் இருந்தாலும், மன்னர்கள் இந்து மதச்சடாங்காச்சாரங்களைப் பின்பற்றத் தொடங்கி, பிராமணர்கள் கூறுகிறபடி பூஜை, சாத்திர முறை ளை மேற்கொண்டபோது, அதற்கொரு ராஜமரியாதை கிட்டி, சமூக அந்தஸ்தையும் பெற்றதால், காலப்போக்கில், பெரும் பகுதி இடங்களில் வேதத்திற்கு பிராமணர் என்பது நியதியாயிற்று.*

*இந்நாட்டின் பல பகுதிகளில் ஆண்ட இனக் குழுக்களின் தலைவர்கள். மன்னர்கள் என்று பெயர் பெற்ற பிறகும், ஆட்சி விவகாரங்களில் தங்களது இனத்தவரையேதான் வைத்துக் கொண்டனர். இவர்களுக்குத் தான் க்ஷத்திரியர் என்ற பொதுப் பெயர் சூட்டப்பட்டது. ஆனால், இப்பெயருக்குள் நூறாயிரம் சாதிப் பிரிவுகள் உண்டு. இவை அனைத்திற்குமாகச் சேர்த்து சூட்டப்பட்ட கௌரவப் பட்டம்தான் க்ஷத்திரியர்.*

*ஒன்று வழக்கத்திற்கு வந்து அது அரசின் அங்கீகாரத்தையும் பெற்று விட்டால், அதையே பின்பற்றி விடுவது பின்தங்கிய மக்களின் சுபாவம்.*

*இம்முறையில், இதைத் தங்கள் தலையில் சூட்டிக்கொண்டோர் ஏராளம்.*

*ஆனால், இவர்கள் நாடாண்ட மன்னன், அவனுக்காகப் படை கொண்டு போராடிய படைத் தளபதிகள், வீரர்களைக் கொண்ட ஒரு பகுதியாக இருந்தது என்பது உண்மை. இது பலவாக இருந்தும், பொதுவான ஒரு பெயர் சூட்டப்பட்டது. இதற்குள் பல நூறு சாதிப் பிரிவுகள் உண்டு.*

*இதே போலத்தான் வைசியர்களும். இது ஒரு பொதுப் பெயராக வாணிபம் செய்தோருக்கு வைக்கப்பட்டிருந்தது. ஆனால், இது ஒரே இனமும் அல்ல. சாதியும் அல்ல. இதற்குள்ளும் பல நூறு சாதிப் பிரிவுகள் உண்டு.*

*இந்த இலக்கணப்படி செட்டியார், நாடார், பிள்ளைமார், சேட்டுகள், குஜராத்திகள், பஞ்சாபிகள், ஈட்டிக்காரன் வரையில் அனைவருமே வைசியர்தான்.*

**தொடரும்**

### கம்யூனிசம் செத்தது!

யாரடா சொன்னது? எவனடா சொல்வது? என அந்த முதுபெரும் கம்யூனிஸ்ட் பெரியவர் கொதித்து போய் எம்மிடம் கேட்டார்.

''கோர்பச்சேவ்தான் சொல்கிறார்'' என்றோம். அவர் ஓங்கிச் சிரித்தார்.

இந்த கம்யூனிஸ்ட் கட்சியில் ஊர்வலம், போராட்டம், மாநாடு, அடக்குமுறை என பல தியாகங்களைச் செய்து பின் கட்சியின் மேல் மட்டம் வந்து எம்.எல்.ஏ.வும் ஆகி இருக்கிறான் ஒரு போலீஸ் அதிகாரி. இது நடந்த கதை.

அப்படித்தான் இந்த சி.ஐ.ஏ. கோர்பச்சேவும் என்றார். ஆனால் இவன் தியாகம்கூடச் செய்யவில்லை என்று சொன்னவர்.

''இவர்களைத் தூக்கி எறிந்து வெற்றிநடை போடத்தான் போகிறது கம்யூனிசம்'' தெளிவாகச் சொன்னார். இது பற்றிய எதிரும் புதிருமான கட்டுரைகள் டாக்சியில் அடுத்து வரும்.

# தமிழ் படும் பாடு!

சிக்கல் இதுதான்:

''யுனிவர்சல்'' என்ற ஆங்கிலச் சொல்லின் கருத்தைத் தமிழில் எப்படி வெளிப்படுத்துவது?

'பிரபஞ்சமான' என்று கூறலாம் என்கிறார்கள் சிலர். தமிழுக்கு இது ஏதோ ஒரு புதியக் கருத்து என்பது மாதிரி, இந்த நாட்டின் ''அறிவு ஜீவிகள்' யுனிவர்சல் என்று ஆங்கிலத்தில் அதைச் சொல்லிக் காட்டுகின்றார்கள்.

ஆனால், அந்தக் காலத்திலேயே 'பரம்' என்ற சொல்லும், அதன் கருத்தும் தமிழ்நாட்டில் விளங்கி வந்திருக்கின்றன.

இந்த 'அறிவு ஜீவிகளுக்கோ' தமிழில் அது இல்லை, இது இல்லை என்று சொல்லிச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்வதே அல்லது சிறுமைப்பட்டுக் கொள்வதே வேலையாகிப் போய்விட்டது.

தமிழ்நாட்டில் வெண்ணெயை வைத்துக் கொண்டு ஐரோப்பாவில் நெய்க்கு அலைகின்ற இவர்களிடம் தமிழ் படுகின்ற பாடு இருக்கிறதே, அது மிகப் பெரும்பாடு!

தனித்தமிழ் என்ற பெயரில் நான் கடுமையான சொற்களைப் பயன்படுத்துவதால்தான் எனது கருத்துக்கள் புரியாமல் போய்விடுகின்றன என்பது பலரும் என் மீது சுமத்துகின்ற ஒரு குற்றச்சாட்டு! கடினம் சொல்லில் இல்லை, சொற்பொருளில் இருக்கிறது என்பது இவர்களுக்குப் புரிவதில்லை. கதையைப் படிப்பது போலவே தத்துவத்தையும் படித்துவிட முடியுமா?


ஆங்கிலத்தில் தொடங்கித் தமிழுக்கு வந்தால்தான் நம் நாட்டு அறிவு ஜீவிகளுக்குப் புரியும் என்பதால் ஆங்கிலத்தில் இருந்தே தொடங்குவோம்.

'அப்ஸ்ட்ராக்ட்' என்றொரு ஆங்கிலச் சொல்! மெய்ப்பொருண்மை இலக்கியங்களில் பயின்று வருகின்ற இந்தச் சொல்லை மார்க்சிய இலக்கியங்களில் பரவலாகக் காணலாம்.

இந்தச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல் 'சூட்சமம்' என்கிறார்கள் அறிவுஜீவிகள். 'அருவம்' என்று சொல்பவர்களும் உண்டு. ஆனால் இதற்கு இணையான தமிழ்ச் சொல் 'நுண்மை' என்பதாகும். எந்தப் பொருளையும் நுணுகிப் பார்த்தால்தான் நுண்மையைப் புரிந்து கொள்ள முடியும். நுணுக்கம் என்பது வேறு.

தத்துவத்தில் நுண்மை, சூட்சமம், அல்லது அப்ஸ்ட்ராக்ட் என்ற கருத்து ஆழமானது. இந்த ஆழத்தின் கடினம் சொல்லின் கடினமாகாது.

'அப்ஸ்ட்ராக்ட்' என்றாலும் 'சூட்சமம்' என்றாலும் 'நுண்மை' என்றாலும் எளிமையாகப் பொருள் விளங்கி விடாது என்கின்றபொழுது, அந்தப் பொருள் புரியாத சொல், ஏன் தமிழாகவே இருக்கக் கூடாது! என்பதுதான் எனது கேள்வி.



ஜோதி பிரகாசம்

கடினம் என்பது சொல்லின் கடினம் அல்ல என்பதற்கு நல்ல உதாரணம் 'சோஷலிசம்'

'சோஷலிசம்' என்பதை 'சமதர்மம்' என்று மொழிப்பெயர்த்து இருக்கிறார்கள். அப்படியானால், சோஷலிசம் = சமதர்மம்.

இனி, சமதர்மம் என்பதை ஆங்கிலப்படுத்துவோம். சமதர்மம் = ஈக்வாலிட்டி = சமன்மை.

எனவே சோஷலிசம் என்றால் சமன்மை அல்லது சமத்துவம் என்று பொருளாகிறது. ஆனால் சோஷலிசம் என்பது வேறு, சமன்மை என்பது வேறு. எனவே சோஷலிசம் என்பதை சமதர்மம் என்று மொழிப்பெயர்ப்பது தவறாகிறது.

இந்தத் தவறான மொழிப்பெயர்ப்புக்குச் சமுதாயச் சூழ்நிலைகள் தாம் காரணம்.

கருவிலேயே உயர்வு தாழ்வு கற்பிக்கின்ற இந்தச் சாதியச் சமுதாயத்து மனிதனால் சமதர்மத்தை அன்றி, சோஷலிசத்தையா கனவு காண முடியும்?

ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் 'பிரக்ஞை' என்று ஒரு பத்திரிகை வெளிவந்தது. அந்தப் பத்திரிகைக் குழுவில் ரெங்கராஜன் அல்லது வீராசாமி என்றொருவர் இருந்தார். தியாகராய நகரில். அவரை தேடிப் போய் கேட்டேன் - பத்திரிகைக்கு பெயர் வைக்க வேறு சொல் கிடைக்கவில்லையா, என்று!

மனிதனுக்கு விடிவே இல்லை என்ற வகைப்பட்ட, 'எக்சிஸ்டெனியலிசம்' பேசுபவர் அவர்! வாழ்க்கையை வரையறுக்கவே முடியாது என்றார். நாம் பேசுகின்ற ஒவ்வொரு சொல்லும் எதையும் புரிந்து கொள்ள முடியாது, அவ்வளவு ஏன்! 'வாழ்க்கையை வரையறுக்க முடியாது' என்பது கூட ஒருவரையறைதான் என்று நான் கிண்டலடித்தேன். அந்தக் கிண்டலை இன்று வரை அவர் மறக்கவில்லை என்பதற்கு அவரது 'புதிய ஜனநாயகம்' சாட்சி!

இறுதியாக அவரிடம் கேட்டேன் - 'பிரக்ஞை' என்ற சொல் செயற்கையாக இல்லியா, என்று!

'கான்சியஸ்னஸ்' என்பதற்கு 'பிரக்ஞை' என்பதை விட்டால் தமிழில் வேறு வார்த்தையே இல்லை என்றார்.

சென்னைக்காரர் அவர்! நெல்லையிலும் மலையா நாட்டிலும் ''ஓர்மை'' என்ற சொல் இருப்பது அவருக்குத் தெரிந்திருக்க முடியாது. அல்லது அவர் ஒரு சமஸ்கிருதப் பற்றாளராக இருந்திருக்க வேண்டும். இந்த 'ஓர்மை'யைத்தான் நான் 'உணர்மை' என்று சுட்டுகிறேன்.

ஆனால் அறிவு ஜீவிகளோ ''உணர்வு'' என்று எழுதுகிறார்கள். 'உணர்வு' என்றால் 'ஃபீலிங்' ''உணர்மை'' என்றால் 'கான்சியஸ்னஸ்'.

ஆங்கிலேயன் வந்தாலும் வந்தான், ஆங்கிலத்தில் சொன்னால்தான் நம்மவர்களுக்கு இப்பொழுது எதுவும் புரிகிறது.

'மக்கள் மொழியில்' பரவசம் காண்கின்ற இந்த அறிவு ஜீவிகள், 'முதல்' என்பதை 'மூலதனம்' என்கிறார்கள். ஆனால் மக்களோ தினமும் 'கொள்முதல்', 'கைமுதல்' என்றே பேசி வருகிறார்கள்.

'முதல்' என்ற சொல்லில் இருந்து 'முதல் மயம்', 'முதல் மயமான்', 'முதலாண்மை' போன்ற சொற்களை உருவாக்கிட முடியும். ஆனால் மூலதனம் என்ற சொல்லோ அந்தக் கருத்தின் இயல்பான வளர்ச்சிக்கே தடைபோட்டு விடுகிறது.

தமிழ்நாட்டு 'இலக்கியவாதிகளுக்கு' மட்டும் எப்பொழுதும் ஒரு விதிவிலக்கு உண்டு. அவர்களுக்குத் தமிழ் தெரிய வேண்டியதில்லை

## உனக்கு மட்டும் இலவசம்



ஒருமுறை இங்கிலாந்தில் ஒரு பெரிய இராணுவம் முகாம் இட்டு இருந்தது.

பக்கத்தில் ஒரு விபச்சாரி இருந்தாள். அவளிடம் மிகப் பெரிய தனவந்தர்களும், பிரபுக்களும் மட்டுமே தொடர்பு வைத்திருந்தனர். அந்த அளவுக்கு பணம் உள்ளவர்கள் மட்டுமே அவளை நெருங்க முடியும்.

ஆனால் இந்த இராணுவ முகாமைச் சேர்ந்தவர்கள் எப்படியும் இவளை அடைய வேண்டும் என ஆர்வம் கொண்டனர்.

ஆசலால் அவர்களில் மிக ஆர்வம் உள்ள நூறு பேர் ஒன்று கூடி ஆளுக்கு பத்து பவுன் வீதம் போட்டு குலுக்கல் முறையில் எடுப்போம். யாருக்கு விழுகிறதோ அந்த வீரன் அவளை இந்தப் பணம் கொண்டு அடையலாம் என முடிவெடுத்தனர்.

கடைசியில் அந்தப் பாக்கியம் ஒரு நோஞ்சான் வீரனுக்குக் கிடைத்தது.

அவனும் பணத்தை எடுத்துக் கொண்டு அந்த விபச்சாரி வீட்டுக்குப் போனான்.

விபச்சாரி வந்தாள். பார்த்தாள். சிரித்தாள். கேட்டாள். ''உன்னிடம் என்னை அடையும் அளவுக்கு பணம் உள்ளதா?''

அவனும் ''இதோ'' என கொண்டு வந்த பணத்தைக் காட்டினான்.

அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

இருந்தாலும் அவளுக்கு பணம்தானே குறிக்கோள்.

அறையைத் திறந்தாள்.

அவனை அழைத்தாள்.

''ஆமாம். நீ சாதாரண சிப்பாய்தானே உனக்கு ஏது இவ்வளவு பணம்?''? ஆர்வமாய்க் கேட்டாள்.

''எங்களில் பலர் உன்னை அடைய விரும்பினோம். இவ்வளவு பெரிய தொகை வேண்டுமே என்று கவலைப் பட்டோம். பிறகு ஒரு முடிவுக்கு வந்து ஆளுக்கு பத்து பவுன் போடுவது குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கும் நபர் அவளை அடைய வேண்டியது என்றோம். அதில் எனக்கு அந்த பாக்கியம் கிடைத்துள்ளது என்று தன் அதிர்ஷ்டத்தை எண்ணி சிரித்தான்.

அவளுக்கு இவர்களை என்ன சொல்வது புரியவில்லை.

சொன்னாள் ''இவ்வளவு ஆர்வமாய் வந்த அதிர்ஷ்டக்காரனான உன்னிடம் பணம் வாங்கிட எனக்கு மனமில்லை. ஆதலால் உன் வரை இலவசமாக வருகிறேன்.

இந்தா உனது பத்து பவுன் பெற்றுக்கொள்.

ஆம். அவனைப் பொறுத்தவரை அவள் இலவசமே.

— யோகி.

என்பதுதான் அது.

'இன்டலக்சுவல்' என்பதை 'அறிவுஜீவி' என்று வயிற்றுப் பிழைப்புக்கு முக்கியம் கொடுத்து மொழிப்பெயர்த்தவர்களைப் பாராட்டியே ஆக வேண்டும். வாழ்க 'மாமிச ஜீவிகள்'

மார்க்சின் 'புனித குடும்பம்' என்ற நூலிலிருந்து ஒரு பகுதியை மொழிபெயர்க்க முயன்றேன். 'ஸ்பிரிட்' என்றொரு சொல் குறுக்கிட்டது. ஸ்பிரிட் என்றால் ஆவி என்று பொருளுண்டு. சாராயமும் ஒரு ஸ்பிரிட் தான். ஆனால் மார்க்ஸ் குறிப்பிடுவதோ சமுதாய ஸ்பிரிட். ஒரு வழியாக 'உயிர்மை' என்று மொழிபெயர்த்து முடித்தேன். எனக்கு சமஸ்கிருதம் தெரியாதது நல்லதாகப் போய் விட்டது.

ஒருமுறை 'ச்சாய்ஸ்' என்ற கருத்தைத் தமிழில் வெளிப்படுத்துவதில் ஒரு பெரிய சிக்கலே ஏற்பட்டு விட்டது. 'தேர்வு' என்றால் 'ச்சாய்ஸ்'. இது ஒன்றும் தமிழுக்குப் புதியது அல்ல. ஆனால் இந்தத் 'தேர்வு' என்ற சொல்லை களவாடி ஆசிரியர்கள் ஏற்கனவே மாணவர்களிடம் கொடுத்து விட்டிருந்ததால் இந்தச் சிக்கல்.

'எக்சாமினேஷன்' என்றால் சோதனை என்று பொருள். விசாரணை என்றும் சொல்லலாம். ஆனால் 'தேர்வு' என்பதற்கும் 'எக்சாமினேஷன்' என்பதற்கும் தொடர்பும் இல்லை. தேர்ச்சி என்பது சோதனையில் அடைகின்ற வெற்றி!

''தேர்தல்'' என்ற சொல், ஏற்கனவே, 'தேர்ந்து எடுக்கப்படும்' 'எலக்ஷனுக்கு'ப் போய் விட்டது. செலக்ஷன் என்பதும் 'ச்சாய்ஸ்' என்பதும் ஒன்றே என்று சொல்லாம் என்றாலும் முன்னது புறலையமானது. பின்னது அக்வயமானது. செலக்ஷன் என்பதை பொறுக்கல் எனலாம். ஆனால் பொறுக்கி என்ற வடிவில் ஊரில் அதற்கு ஏற்கனவே கெட்ட பெயர்! வேறு வழி இல்லாமல் 'ச்சாய்ஸ்' என்பதைத் தேர்கை என்று சுட்ட வேண்டியதாயிற்று.

இந்தியை எதிர்ப்பவர்கள் இந்திக்காரர்களிடமிருந்து நிறைய கற்

## உங்களின் முகவரி...

இந்த இதழிலிருந்து எமது சந்தாதாரர்களின் முகவரிகளை பிரசுரிக்கிறோம். சந்தா உறுப்பினர்களின் கதை, கவிதை, கட்டுரை, செய்தி, தொகுப்புகள், துணுக்குகள், மருத்துவக் குறிப்புகள் ஆகியவற்றை அன்புடன் வரவேற்கிறோம். எனவே வாசகர்களே சந்தா தொகை (M.O./D.D) அனுப்பி சந்தாதாரர்களாகுங்கள்.

ஆண்டு சந்தா ரூ.30/-

ஆயுள் தந்தா ரூ.300/-

முகவரிகள்:

1. C.R.வெங்கட்ராமன்
35/6, திருமலைப்பிள்ளை ரோடு
சென்னை-600 017.

2. V.பாண்டியன்,
28-A மேட்லி ரோடு,
சென்னை-600 017.

3. M.பொன்னுசாமி
107/18, 7-வது அவென்யூ
பெசன்ட் நகர்,
சென்னை-600 090.

4. A.காட்வின், B.Sc., B.L.
196, சூளை மேடு ஐரோடு,
சென்னை-600 094.

5. T.சித்ரா M.Sc.,
விநாயகர் நகர்,
மூலானூர்-638 106.

உதாரணமான சொல் 'மாநிலம்'

'ராஜ்யசபை' என்ற இந்திச் சொல்லை 'மாநிலங்களவை' என்று தமிழில் சொல்லுகிறார்கள். இனி மாநிலம் என்றால் மாகாணம் என்றும் பொருள் கூறுகிறார்கள். இந்த மாகாணம் என்பது கொஞ்சம் கொஞ்சமாகப் பிராந்தியம் என்றும் ஆகிவிடுகிறது. பிராந்தியம் என்றால் வட்டாரம்.

ஆக, மாநிலம் என்றால் ஒரு நாட்டின் பகுதி அல்லது வட்டாரம் என்று பொருள் கொள்ளப்படுகிறது. மறுமலர்ச்சியாளர் அப்பாதுரையாருக்கு இது பிடிக்கவில்லை! அவரோ உலகம் என்ற பொருளில் மாநிலம் என்ற சொல்லைப் பயன்படுத்தினார்.

முன்பெல்லாம் தமிழ்நாட்டை 'சென்னை ராஜ்யம்' என்று அழைப்பார்கள். ராஜ்யம் என்றால் நாடு. இப்பொழுது அது பிராந்தியம் என்று ஆகிவிட்டது.

ஆங்கிலத்தில் 'ஸ்டேட்' என்றால் அரசு அல்லது மிகச் சரியாக 'நாடு' என்று பொருள். எனவே ஸ்டேட்களின் அவையை 'ராஜ்யசபா' என்பது சரியான இந்திப் பெயர்ப்பு. தமிழில் அது 'நாடுகளின் அவை' என்று பெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால் இந்தியா என்பது 'நாடுகளின் சங்கம்' என்று அரசமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. இதனை பிராந்தியங்க

வண்ணம் தமிழில் 'மாநிலங்களின் ஒன்றியம்' என்று மொழிபெயர்ப்பு சரியானது அல்ல. ''நாடுகளின் ஒன்றியம்'' என்பதே சரியானது.

''இந்தியக் கம்யூனிஸ்டுகளின்'' எழுத்துக்களில் 'பொருள் முதல்வாதம்' 'கருத்து முதல் வாதம்' 'இயங்கியல்' போன்ற பதங்களை அவ்வப்போது காணலாம். 'மெட்டீரியலிசம்', 'ஐடியலிசம்' 'டயலக்டிக்ஸ்' என்பவற்றைத்தாம் இவர்கள் இப்படிக் குறிப்பிட்டு வருகிறார்கள் என்பது வெளிப்படை!

இவற்றை முறையே, 'பருமைவாதம்' 'கருத்துவாதம்' 'முரணியக்கம்' என்று தமிழ்ப்படுத்துவதுதான் சுருக்கமாகவும் சரியாகவும் இருக்க முடியும்.



''பொருள் முதல்வாதம்'' ...ற பொழிபெயர்ப்பில் ...ாருள்' என்ற சொல் 'பருமை' ...ற பொருளில் கையாளப்படுகி... ஆனால், 'பொருள்' என்றாலே ...ப்பொருள்' என்று பொருளாகி ...ாது.

'பொருள்' என்பது பொதுவான சொல். பொருள்களில் கருத்துப் ...ருள், பருப்பொருள், நுண்மைப் ...ருள் என்று பல பொருள்கள் ...ாடு. எனவே பருமைவாதம் என் ...தான் 'மெட்டீரியலிசம்' என்ப...கு இணையான சொல்லாகும்.

இந்த 'இயங்கியல்' இருக்கி...ந, இது மிகவும் வேடிக்கையா... இயங்கியல் என்பதன் மூலம் ...ர்கள் உண்மையிலேயே குறிப் ... விரும்பியது தன்னுள்ளேயே ...ண்பட்டு முரண்பட்டு இயங்கு...ற ஓர் இயக்கத்தினைத்தான். ...ன்றால், இயக்கத்தில் வளரியக் ... சுற்றியக்கம், சுருளியாக்கம் ...ற்று பல இயக்கங்கள் உண்டு. ...ாவே, 'முரணியக்கம்' என்பது ...ன் 'டயலடிக்டிக்ஸ்' என்பதன் சரி...ன தமிழாகிறது.

இப்படி, அறிவு ஜீவிகளின் ...கயில் தமிழ் படும் பாட்டினைச் ...ால்லிக் கொண்டே போகலாம். ...த்துக்களின் வளர்ச்சி மொழியின் ...ர்ச்சியினோடு சேர்ந்து இயங்கு... என்பதே மனத்தில் இருத்திக் ...ள்வோமானால் இதுபோன்ற சிக்...கள் நிகழாமல் பார்த்துக் கொள்ள...ம்.

...சாலை இளந்தாரையனுக்கு ...ந சிக்கல். 'நிஃபில்' என்பதை எப்...த் தமிழ்ப்படுத்தலாம் என்று ...ணி எண்ணிப் பார்த்தாராம். ஒரு ...டிவுக்கும் வரமுடியவில்லை. ...ந்த போன 'ரிஃபில்' தரையில் ...டந்து அவரைப் பார்த்துச் சிரித்தது.

துடைப்பத்துடன் வந்த ...வலைக்காரி தரையை பெருக்கத் ...தாடங்கினாள். அந்த ரிஃபில் ...ந்து போனதுதானா,. இல்லையா ...ன்று அவளுக்கு ஐயம் ஏற்பட்டது. ...வள் கேட்டாள், ''ஐயா இந்த மைக் ...ச்சி தீர்ந்து போனதுதானே?''

## சினிமா புதிர்

சினிமா பற்றிய தமிழ் புத்தகம் ஒன்றிற்கு ஜனாதிபதி தங்கப்பதக்கம் கிடைத்துள்ளது? அந்தப் புத்தகப் பெயர் என்ன? அதை எழுதியவர் யார்?

தமிழகத்தில் முதல் கலர் படம் தயாரித்த கம்பெனி எது? அப்படப் பெயர் என்ன?

தமிழ் திரையுலகில் பாடல் இல்லாத முதல் படம்,


கதாநாயகி இல் லாத முதல் படம்,

வசனம் இல்லாத முதல் படம் என்னென்ன?



* இம்மூன்று கேள்விக்கும் சரியான பதில் சொல்லும் முதல் வாசகருக்கு ரூ.50 சன்மானமும்

* அடுத்து இரு வாசகருக்கு ஓராண்டு டாக்சி இதழும் (மாதந்தோறும்) அனுப்பி வைக்கப்படும்.



# அமெரிக்க ஏவல் நாய்!




EDITED, PUBLISHED AND OWNED BY C.P.KUPPUPSWAMY AT NO: 326, ARCOT ROAD, KODAMB/
MADRAS - 600 024. PRINTED BY A BOOBALAKRISHNAN AT PAVAI ACHAGAM, NO: 62 ARCOT ROAD
MBAKKAM, MADRAS - 600 024.